# சமூக சேவைகள் அமைச்சு

# 2013

# செயற்பாட்டு அறிக்கை


## சமூக சேவைகள் அமைச்சு

1 ஆம் மாடி,
"செத்சிறிபாய" கட்டம் II,
பத்தரமுல்லை.

தொலைபேசி : 0112887349-51 தொலைநகல் : 0112877381

தொலைமடல் : msssec@sltnet.lk

**உள்ளடக்கம்** **பக்க இல.**


| | | |
|---|---|---|
| அமைச்சின் பணிக்கூற்று | | v |
| அமைச்சின் குறிக்கோள்கள், தொழிற்பாடுகள் மற்றும் சட்டமூலங்கள் | | Vii - ix |
| அமைச்சின் கீழுள்ள பிரிவுகளின் சாதனைகள் | | |
| 1. | நிர்வாகப் பிரிவு | 1 - 8 |
| 2. | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும் | 9 - 15 |
| 3. | அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு | 16 - 18 |
| 4. | உளவளத்துணைப் பிரிவு | 19 - 22 |
| 5. | தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைப் புனர்வாழ்வளிக்கும் செயற்திட்டம் | 23 - 27 |
| 6. | சிசுநன புபுதுவ நிகழ்ச்சித் திட்டம் (மாணவர்களுக்கிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துதல்) | 28 - 29 |
| 7. | சமூகப் பராமரிப்பு நிலையக் கருத்திட்டம் | 30 - 34 |
| 8. | கணக்குகள் பிரிவு | 35 - 38 |
| 9. | திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | 39 - 40 |
| 10. | உள்ளகக் கணக்காய்வுக் கிளை | 41 - 42 |

# அமைச்சின்

# பணிக்கூற்று

எமது குறிக்கோள், சமூகத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களைச் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரியில் அவர்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்குதலூடாகவும், கொள்கைகளை முன்னெடுப்பதனூடாகவும் சாதகமான சூழலையும், சந்தர்ப்பத்தையும் வழங்கித் தேசிய அபிவிருத்தியில் அவர்களைப் பங்காளிகளாக உருவாக்குதலாகும்.

# அமைச்சின் குறிக்கோள்கள், தொழிற்பாடுகள் மற்றும் சட்டமூலங்கள்

## குறிக்கோள்கள்

- ❖ சமூகத்திற் பின்தங்கிய நிலையிலுள்ள குழுக்களுக்கு சமூக வாழ்விற் சமமான வாய்ப்புக்களையும்/சம சந்தர்ப்பங்களையும், உரிமைகளையும் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல்.
- ❖ சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்குச் சமூக ஆதரவையும், பாதுகாப்பையும் வழங்கல்.
- ❖ குடும்பங்களிலிருந்தும், சமூகத்திலிருந்தும் பிரிந்த போர் வீரர்களுக்குச் சமூகத்துடன் இணைவதற்கான வசதிகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல்.
- ❖ சமூகத்தில் உரிமை மறுக்கப்பட்டவர்கள் தன்னம்பிக்கையினூடாக தமது சமூகப் பொருளாதார உயர்ச்சியினை அடைவதற்கு உதவி செய்தல்.
- ❖ சமூகப் பணியாளரது திறன் விருத்தியினை முறைமையாகப் பயனளிக்கக்கூடிய வகையிற் சமூகத்திற்கு வழங்குதல்.
- ❖ சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினூடாக சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களின் குடும்பங்களினை மேம்படுத்தல்.

## தொழிற்பாடுகள்

- ❖ சமூக அபிவிருத்தி, சமூக நலன்புரி போன்றவற்றிற்கான கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்கல்.
- ❖ சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குதலும், வலுப்படுத்துதலும்.
- ❖ இலக்கு வைக்கப்பட்டுள்ள குழுக்களுக்குச் சேவை செய்வதற்கு மனிதவளத்தை விருத்தி செய்தல்.
- ❖ சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு நடாத்துதல், வழிகாட்டுதல், மேற்பார்வை செய்தலும், கட்டுப்படுத்தலும்.

- ❖ சமூக அபிவிருத்தியில் உலகத் தலைவர்களின் கூட்டு ஆலோசனையின் அர்ப்பணிப்புக்களைப் பின்பற்றுதல்.
- ❖ சமூக நலன்புரி தொண்டர் நிறுவனங்களைப் பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும், உதவியளித்தலும்.
- ❖ சமூக அபிவிருத்தி முகாமைத்துவத் தகவல் முறைமையை உருவாக்குதல்
- ❖ தேசிய மற்றும் உப மட்டத்திலுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- ❖ அங்கவீனமான நபர்களைச் சமூகத்துடன் இணைப்பதற்குப் புனர்வாழ்வளித்தலும், சமூக ஒருங்கிணைப்புச் செய்தலும்.
- ❖ உளவளத்துணைச் சேவைகளை வழங்குதலும், ஒருங்கிணைப்புச் செய்தலும்.
- ❖ அங்கவீனமானவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- ❖ முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- ❖ கஷ்டமான சூழலில்/நிலைமையில் வாழ்கின்ற பெண்களினதும், சிறுவர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
- ❖ மனநோய்களிலிருந்து குணமடைந்து வரும் நபர்களினைச் சமூகத்துடன் ஒருங்கிணைத்தல்.
- ❖ இளைஞர்களுக்கான தொழிற்திறன் பயிற்சி வழங்குதல்.
- ❖ ஏழைச் சிறார்களுக்கான "சிசுனன புபுதுவ" (சிறுவர் கல்வி அபிவிருத்தி) என்ற செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

## சட்டமூலங்கள்

(i) 1947 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் 21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

(ii) சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுற்படுத்தப்படும் 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியத்தினை புனர்வாழ்வளிப்பதற்கான சட்டமூலம்.

(iii) 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கத் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டமூலம்.

(iv) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலம்.

(v) அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கை - 2003

(vi) 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் (திருத்தம்) சட்டமூலம்.

(vii) 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.

(viii) 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலம்.

(ix) மூத்த பிரஜைகளுக்கான தேசியப் பட்டயமும் மற்றும் இலங்கை மூத்த பிரஜைகளுக்கான தேசியக் கொள்கையும்- 2006.

(x) 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் (திருத்தம்) சட்டமூலம்.

(xi) இலங்கைக்கான தேசியக் கொள்கை (வரைபு)

# 01.நிருவாகப் பிரிவு

பணிக்கூற்று

**சமூக சேவைகள் அமைச்சினதும் மற்றும் அதன் இணை நிறுவனங்களினதும் மனித வளங்களை முகாமை செய்வதற்காகத் தாபன விதிக்கோவை மற்றும் சுற்றுநிரூபங்களிற்கு இசைவாக அதிக அர்ப்பணிப்புடனும் மற்றும் ஆர்வத்துடனும்,**
**வினைத்திறனான நிருவாகத்தினை மேற்கொள்வதனூடாக விளைதிறனை எட்டுவதே எமது நோக்காகும்**

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் பின்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் இயங்குகின்றன.

1. சமூக சேவைகள் திணைக்களம்
2. முதியோர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும்
3. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
4. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும்.
5. தேசிய உளவளத்துணை நிலையம்
6. அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்.)

**2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற புதிய நியமனம், பணி ஓய்வு பெற்றோர்கள், இடமாற்றம் கிடைக்கப் பெற்றோர் மற்றும் பட்டதாரிகள் தொடர்பான விபரங்கள்.**

**பணி ஓய்வு பெற்றோர்**

| இல. | பெயர் | பதவி | ஓய்வு பெற்ற தினம் |
|---|---|---|---|
| 01. | திரு. எம்.டி.சி. ஜயமான்ன | பணிப்பாளர் (அங்கவீனமுற்றோர்களுக்கான தேசிய செயலகம்) | 2013.08.14 |
| 02. | திருமதி. ஐ.எச். ரூபசிங்க | அ.மு.உ. I | 2013.08.01 |
| 03. | திரு. டபிள்யு.டபிள்யு. பொத்தேயு | அ.ப.சே. . I | 2013.04.27 |

**பதவி விலகியோர்**

| இல. | பெயர் | பதவி | பதவி விலகிய தினம் |
|---|---|---|---|
| 01. | திருமதி. கே.பி.டி.டி.என். கருணாநாயக்க | அ.மு.உ. III | 2013.05.08 |

**பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டோர்**

| இல. | பெயர் | பதவி | விடுவிக்கப்பட்ட இடம் | தினம் |
|---|---|---|---|---|
| 01. | திருமதி. பி.ஏ.டபிள்யு. பமுனுசிங்க | அ.மு.உ. III | கல்வி அமைச்சு (ஆசிரியர்) | 2013.01.01 |
| 02. | செல்வி. பி.சி. பிரியதர்சனி | அ.மு.உ. III | கல்வி அமைச்சு (ஆசிரியர்) | 2013.09.02 |

**அமைச்சுக்கு இடமாற்றப்பட்ட உத்தியோகத்தர்கள்**

| இல. | பெயர் | பதவி | எவ்விடத்திலிருந்து | தினம் |
|---|---|---|---|---|
| 01. | திருமதி. எச்.எம்.எஸ். ஜயதுங்க | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | பொது நிர்வாக அமைச்சு | 2013.05.07 |
| 02. | திருமதி. எஸ்.ஏ.டி.எஸ். சுபசிங்க | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு. | 2013.05.15 |
| 03. | திரு. ஜே.ஏ.எஸ். ரவீந்ர | பணிப்பாளர் (அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்) | பொது நிர்வாக அமைச்சு | 2013.08.14 |
| 04. | திரு. எஸ்.டி. | மேலதிக | பொது உறவுகள் மற்றும் | 2013.12.19 |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடவத்த | செயலாளர் (நிர்வாகம்) | பொது அலுவல்கள் அமைச்சு. | |
| 05. | திருமதி. எம்.கே.கே. ரசிகா அபேதீர | பணிப்பாளர் (உளவளத்துணை) | தேசிய மரபுரிமை அமைச்சு. | 2013.02.26 |
| 06. | திருமதி. ஆர்.பி.கே. ரணசிங்க | அ.மு.உ. I | தொழில்நுட்பக் கல்வித் தேசிய நிறுவகம் | 2013.12.26 |
| 07. | திருமதி. அஜந்தா விக்ரமசிங்க | அ.மு.உ. I | நிர்மாணப் பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு. | 2013.02.01 |
| 08. | செல்வி. எம்.சி.எஸ். போல்சிங் | அ.மு.உ. III | ஆயுர்வேத திணைக்களம் | 2013.07.04 |
| 09. | திரு. ஆர். பாலித | சாரதி | வருமான வரித் திணைக்களம் | 2013.01.21 |

**அமைச்சிலிருந்து இடமாற்றப்பட்ட உத்தியோகத்தர்கள்**

| இல. | பெயர் | பதவி | இடமாற்றம் கிடைக்கப் பெற்ற இடம் | தினம் |
|---|---|---|---|---|
| 01. | திருமதி. என்.கே. அபேரத்ன | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | சிறுவர் அபிவிருத்தி அமைச்சு | 2013.05.10 |
| 02. | திரு. எம்.சி.எல். பெர்னான்டோ | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு. | 2013.05.15 |
| 03. | திருமதி. எச்.எம்.எஸ். ஜயதுங்க | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | ஜனாதிபதி செயலகம் | 2013.11.21 |
| 04. | திரு. எம்.எச்.எல். ஸமீல் | பணிப்பாளர் (உளவளத்துணை) | புத்தசாசன அமைச்சு. | 2013.01.01 |
| 05. | திரு. டி.எம்.ஏ.எஸ். நிரோசன | உதவிப் பணிப்பாளர் (அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்) | தேசியத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு. | 2013.09.02 |
| 06. | திருமதி. ஜி.ஜி.என்.ஏ. பெரேரா | மொழிபெயர்ப்பாளர் | ஜனாதிபதி செயலகம் | 2013.10.21 |
| 07. | திருமதி. எஸ்.வி.கே. தமரா | தகவற் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர். | தேசியத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2013.01.23 |
| 08. | திருமதி. எச்.ஐ. இந்திக்கா | தகவற் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர். | வாகே பிரதேச செயலகம் | 2013.10.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 09. | திருமதி. ஏ.என். மடிககே | அ.மு.உ. II | கல்வி அமைச்சு | 2013.01.01 |
| 10. | திரு. எஸ்.எம். சிறிவர்தன | சாரதி | பரீட்சைத் திணைக்களம். | 2013.01.01 |
| 11. | திரு. ஆர்.ஏ.ஆர். டி ஜயதிலக | சாரதி | துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு. | 2013.05.21 |

**2013.12.31 அன்றைய திகதியில் பின்வரும் 208 பட்டதாரி உத்தியோகத்தர்கள் இவ்வமைச்சின் கீழ்ப் பணியாற்றுகின்றனர்.**

01. உளவளத்துணை உதவியாளர் - 93
02. விநியோக உதவியாளர் - 02
03. அபிவிருத்தி உதவியாளர் - 02
04. அலகு உதவியாளர் - 06
05. அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை) - 85
06. அபிவிருத்தி உத்தியோகத்தர் - 20

**2013.12.31 அன்றைய திகதி வரையில் 08 அபிவிருத்தி உதவியாளர்கள் (தேவைக்கு அதிகம்) சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

## அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்கள்

**2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதியில் ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட தினங்கள்.**

01. 2013.02.20
02. 2013.03.19
03. 2013.04.10
04. 2013.05.21
05. 2013.07.25
06. 2013.09.05

**2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதியில் நிதி அமைச்சுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட வரிவிலக்களிப்புக்களின் விபரங்கள்.**

| தொடர் இல. | நிறுவனத்தின் பெயர் | நன்கொடையாளர் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர், வேள்ட் விஷன் லங்கா, மருதானை, கொழும்பு. | அமெரிக்கா ஐக்கிய இராச்சியம் |
| 02. | கொழும்பு பிரண்ட இன்ட் நீட் சொசைட்டி | இங்கிலாந்து |
| | | இந்தியா |

| | | |
|---|---|---|
| | | இந்தியா |
| 03. | செயலாளர், சமூக சேவைகள் அமைச்சு. | சிங்கப்பூர் |
| 04. | வெசல்ஸ் ஓனர்ஸ் | அத்லான்டிக்கா |
| 05. | கொழும்பு பிரண்ட இன்ட் நீட் சொசைட்டி | இந்தியா |
| 06. | டொன் பொஸ்கோ | இத்தாலி |
| 07. | கௌரவ. பீலிக்ஸ் பெரேரா (பா.உ.), சமூக சேவைகள் அமைச்சர். | குவைற் |
| 08. | இலங்கை விழிப்புலனற்றோர் சங்கம் | தென் ஆபிரிக்கா |
| 09. | கலைவாணி சனசமூக நிலையம். | சுவிசர்லாந்து |
| 10. | சிஸ்டர் றொபினா போலின், கொறி குறஸ் புறவின்சியலேட். | சுவிசர்லாந்து |
| 11. | மீள் குடியேற்றப் பிரதியமைச்சர் – கௌரவ. விநாயக மூர்த்தி முரளீதரன். | சிங்கப்பூர் |
| 12. | செயலாளர், சமூக சேவைகள் அமைச்சு. | சிங்கப்பூர் |
| 13. | திருமதி. எம்.பி. ஜயவர்தன, மாநகர சபை ஆணையாளர், கொழும்பு மாநகர சபை. | கொரியா |
| 14. | சமாதி ஐக்கிய அபிவிருத்தி மன்றம் | அமெரிக்கா |
| 15. | லயன்ஸ் கிளப் – வத்தளை | அவுஸ்திரேலியா |

**2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதியில் இவ்வமைச்சிலிருந்து வெளிநாட்டுப் புலமைப் பரிசில் கிடைக்கப் பெற்று சென்ற உத்தியோகத்தர்களின் விபரம்.**

| கோவை இல. | நிகழ்ச்சித் திட்டம் | உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவி | நாடு | காலப் பகுதி |
|---|---|---|---|---|
| MSS/3/4/5/1/2013 | சமுதாய அடிப்படையிலான தொழில் உதவியினூடாக அங்கவீனமுற்ற நபர்களின் பொருளாதாரத்தினை வலுவூட்டுதல். | திரு. டி.எம்.எஸ்.ஏ. நிரோசன, உதவிப் பணிப்பாளர், திரு. சி.பி.எல். பெர்னான்டோ, சமூக சேவைகள் உத்தியோகத்தர். | ஜப்பான் | 2013, ஜன 09 – பெப். 02. |
| MSS/3/4/5/2/2013 | 3 ஆவது பிராந்திய அங்கவீன சமத்துவம் பயிலுனர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம் | திரு. எம்.என்.எஸ். உதயகுமார, சமூக சேவைகள் உத்தியோகத்தர். | மலேசியா | 2013, ஜன. 8-18, |
| MSS/3/4/5/3/2013 | ஆற்றலைக் கட்டியெழுப்பும் பயிற்சி வேலைத்திட்டம். | திருமதி. எச்.எம்.சி.ஜே. கேரத், விரிவுரையாளர் | இந்தியா | 2013, ஜன. 7-31, |
| MSS/3/4/5/4/2013 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான சம உரிமைகள் தொடர்பான பிராந்தியப் பயிற்சியும் மற்றும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு தொடர்பான கருத்தரங்கும். | திருமதி. எஸ்.பி. வெத்தேவா, சமூக சேவைகள் உத்தியோகத்தர். | தாய்லாந்து | 2013, பெப். 05-09, |
| MSS/3/4/5/5/2013 | ஆற்றலை மேம்படுத்தும் வேலைத்திட்டம் | திருமதி. இமெல்டா சுகுமார், செயலாளர். | நேபாளம் | 2013, மார்ச் 18 -22. |
| MSS/3/4/5/7/2013 | அங்கவீனமுற்ற இளைஞர்கள் மற்றும் வாழ்க்கைத் | திருமதி. இமெல்டா சுகுமார், செயலாளர். | கொறியா | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழிற்பயிற்சி நிலையங்களின் போதனாசியர்களுக்கான பல் வருட ஆற்றலைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம். | திருமதி. பி.எ.ஜீ. பெர்னான்டோ, பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்.<br>திரு. எம். இராமமூர்த்தி, பணிப்பாளர் (திட்டமிடல்).<br>திரு. கே.என்.எல். சிறிமேவன், அலுவலகப் பொறுப்பு உத்தியோகத்தர்.<br>திருமதி. ஜி.எல்.எல். குணசிங்க, அலுவலகப் பொறுப்பு உத்தியோகத்தர்.<br>திரு. என்.ஐ. கருணாசேன, அலுவலகப் பொறுப்பு உத்தியோகத்தர்.<br>திரு. எம்.எ.பி. முனசிங்க, அலுவலகப் பொறுப்பு உத்தியோகத்தர்.<br>திரு.பி.எ.கே தயவன்ச, அலுவலகப் பொறுப்பு உத்தியோகத்தர்.<br>திரு. எ.எச்.எம்.யு. சம்பத், தொழில் முகாமையாளர்.<br>திரு. யு.எல். ராஜபக்ச, தொழிற் பயிற்சிப் போதனாசிரியர்.<br>திருமதி. ஜி.பி.கே. பத்மசிறி, தொழிற் பயிற்சிப் போதனாசிரியர்.<br>திரு. என்.எஸ். தர்மவர்தன, தொழிற் பயிற்சிப் போதனாசிரியர். | | |
| MSS/3/4/5/8/2013 | சமூக முகாமைத்துவத்தில் மகளிர் உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு. | திருமதி,. ரசிகா அபேதீர, பணிப்பாளர் (உளவளத்துணை),<br>திருமதி. ஜி.எ.எம்.எஸ்.பி விஜேசேகர, விரிவுரையாளர்,<br>திருமதி. யமுனா குமாரி, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர். | சீனா | 2013, யூன் 3-17. |
| MSS/3/4/5/9/2013 | ரோக்கியோவில் மூன்றாவது பிராந்திய மகாநாடு. | திரு. எஸ். குமார, சமூக சேவைகள் உத்தியோகத்தர். | ஜப்பான் | 2013, ஓகஸ்டு 22-24, |
| MSS/3/4/5/10/2013 | சிரேட்ட உத்தியோகத்தர்களின் தலைமைத்துவ விருத்திக்கான அஸ்திரேலியாவின் தலைமைத்துவத்தினை வழங்குகின்ற பயிற்சி வேலைத்திட்டம். | திருமதி. ஏ.ஜீ. பெர்னான்டோ, பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், | அவுஸ்திரேலியா | 2013, ஓகஸ்டு 31- செப். 22 |
| MSS/3/4/5/11/2013 | கருத்தரங்கு மற்றும் கல்விச் சுற்றுலா | திரு. ஆர். ஜயசிங்க, பணிப்பாளர் நாயகம். | ஜப்பான் | 2013, நவ. 06-11 |

| | | | | |
|---|---|---|---|---|
| MSS/3/4/5/12/2013 | புண்பட்ட மனதுக்கு ஆறுதலளிப்பதற்கு மனோதத்துவத் தலையீடு | திரு. பி. அருமைத்துரை, உளவளத்துணை உதவியாளர். | சீனா | 2013, ஒக். 07-15. |
| MSS/3/4/5/13/2013 | உலக அங்கவீன செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடுதல். | திரு. சி.பி.எல். பெர்னான்டோ, சமூக சேவைகள் உத்தியோகத்தர். | பிலிப்பைன்ஸ் | 2013, ஒக். 30-31 |
| MSS/3/4/5/14/2013 | உத்தியினை சுட்டிக்காட்டுபவர்களுக்கான விளைதிறனான தரவுத் தலைமுறை தொடர்பான நிபுணர் குழுக் கூட்டம் | திரு. எம். இராமமூர்த்தி, பணிப்பாளர் (திட்டமிடல்) | தாய்லாந்து | 2013, நவ. 6-7 |
| MSS/3/4/5/15/2013 | ஆசிய பசுபிக் எண்ணியல் நூலகங்கள் தொடர்பான சரவதேச மகாநாடு (ICADL 2013) | திரு. டி.கே. ஐ. விஜேரத்ன, கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர். | இந்தியா | 2013, திசம்பர், 09-12. |
| MSS/3/4/5/16/2013 | தொழில்வாண்மையாளர்களுக்கான பயிற்சி | திருமதி. எம்.ரி. ஆர்.எஸ். அத்தனாயக்க, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம். | | 2013, திசம்பர் 18 |

**2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதியில் பயிற்சி நெறியினை மேற்கொண்டவர்களின் விபரங்கள்.**

| தொடர் இல. | பயிற்சிப் பாடநெறியின் பெயர் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | அரச கணக்குகள் திணைக்களம் | 02 |
| 02. | கொள்முதற் செயற் பயிற்சி | 01 |
| 03. | நிர்வாகத் தொழில்வாண்மையாளர்களுக்கான வியாபாரக் கற்கை தொடர்பான இருநாள் வேலைத்திட்டம் | 01 |
| 04. | வாகன ஒருங்கிணைப்புப் பயிற்சி | 02 |
| 05. | சாரதிகளின் விளைதிறன் மற்றும் வினைத்திறன் தொடர்பான வேலைத்திட்டம் | 15 |
| 06. | உளவளத்துணை இளமாணிப் பட்டத்தினைத் தொடர்தல். | 07 |
| 07. | அரச மொழிகள் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடநெறி | 05 |

**அமைச்சரவை விஞ்ஞாபனம் - 2013**

| தொடர் இல. | விடயம் |
|---|---|
| | சித்தப்பிரமை மற்றும் உளக்கோளாறுகளுடன் தொடர்பான அங்கவீனத்தின் காரணமாக அங்கவீன நிலைமைக்கு உட்பட்டுள்ள சிறுவர்களுக்கான வதிவிடப் பாதுகாப்பு இல்லமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒதுக்கீடுகளைத் தொடர்ந்து வழங்குதல். |
| 01. | தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையத்தினை விரிவுபடுத்துதல். |

| | |
|---|---|
| 02. | தன்னார்வத் தொண்டர்களின் தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நிலையக் (VOICE) கருத்திட்டத்தினை விரிவுபடுத்தல். |
| 03. | சிறீலங்கா நிர்வாக சேவையின் 1 ஆம் வகுப்பினைச் சேர்ந்த திருமதி. பீ.ஏ.ஜீ. பிரனாந்து அவர்களைச் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்புச் செய்தல். |
| 04. | பிரத்தியேக உறுப்பினர்களின் சட்டமூலம் - பிலிப் குணவர்தன ஞாபகார்த்த சங்கம் (கூட்டிணைத்தல்) தொடர்பன சட்ட வரைபு |
| 05. | பிரத்தியேக உறுப்பினர்களின் சட்டமூலம் - சந்திமா வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) தொடர்பன சட்ட வரைபு |
| 06. | நிரந்தர சேவையிலிருந்து தற்காலிக பதவியொன்றுக்காக இணைப்புச் செய்தலின் அடிப்படையில் கடமையாற்றிய காலத்தினை ஓய்வூதியக் கணிப்புக்கு உள்வாங்குதல் மற்றும் சேவையின் தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு 60 வயது வரை கடமைக்கு அமர்த்துதல்.<br>திரு.ஏஜே.கே.திஸ்ஸவீரசிங்க-(நடுத்தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் III) |
| 07. | வெள்ளைப் பிரம்புப் பாவனையாளர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு |
| 08. | பதவிக்கு நியமனம் - திருமதி. அனுசா கோகுள பிரனாந்து -சிறீலங்கா நிர்வாக சேவை. |
| 09. | அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கையினை அமுற்படுத்துதல் |
| 10. | அங்கவீனர் மற்றும் முதியோர்களின் உற்பத்திகளுக்கு விற்பனை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் |
| 11. | 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை – முதியோர்களுக்கான தேசிய சபை. |
| 12. | பிரத்தியேக உறுப்பினர்களின் சட்டமூலம் – லக்ஸ்மன் வசந்தா பெரேரா சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) தொடர்பான சட்ட வரைபு |
| 13. | பிரத்தியேக உறுப்பினர்களின் சட்டமூலம் – விக்டர் அன்ரனி கல்வி சார், சமூக, பொருளாதார சேவைகள் மற்றும் அறக்கொடை நிறுவனம் (கூட்டிணைத்தல்) தொடர்பான சட்ட வரைபு |
| 14. | ஆலோசகராகக் கடமையாற்றும் திரு. கேர்பி எஸ். டி லனரோல் அவர்களின் ஒப்பந்தச் சேவையினை நீடிப்புச் செய்தல். |

# 02. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும்

**பணிக்கூற்று**

**"ஆலோசனைகளை வழங்குதல், உதவி புரிதல், ஒருங்கிணைப்புச் செய்தல், அமுற்படுத்துதல், மேற்பார்வை செய்தல் ஆகிய அபிவிருத்திச் செயற்பாடுகளினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான உரிமைகளை உறுதி செய்தலே எமது பணியின் நோக்காகும்".**

## குறிக்கோள்.

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றுதல் மற்றும் பாதுகாத்தலுக்கான 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட சட்டங்களை அமுற்படுத்துதல்.

## தொழிற்பாடுகளும் மற்றும் செயற்பாடுகளும்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள், அங்கவீனமுற்றோரின் முன்னேற்றம், உயர்ச்சி மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டமூலத்தின் பிரகாரம், அங்கவீனமுற்றோருக்கான தேசிய சபை ஒன்றினை இவ்வமைச்சில் ஸ்தாபித்துள்ளார். அதன்படி இத்தேசிய சபையினால் பின்வரும் விடயங்கள் பற்றி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- அங்கவீனமுற்றோரின் நலன்களை மேம்படுத்துதல்.
- வலுவிழக்கச் செய்யும் பிரதான காரணங்களை வருமுன் காத்தலும், கட்டுப்படுத்தலும்.
- அங்கவீனமுற்றோர் பற்றிய புள்ளி விபரங்களை மிகத் துல்லியமாகப் புள்ளி விபரங்களைப் பேணுதல்.
- அங்கவீனமுற்றோரின் புனர்வாழ்வுக்கும், மேம்பாட்டுக்குகம் நடவடிக்கை எடுத்தல்.
- அங்கவீனமுற்றோருக்காக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தலும், அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும்.
- அங்கவீனமுற்ற நபர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்
- அங்கவீனமுற்றோருக்கான சரியானதொரு பௌதிகச் சூழலைத் தயார் செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களையும், கொள்கைளையும் உருவாக்குதலும், வழிகாட்டுதலும்.
- அங்கவீனமுற்றோரின் தேவைகள், நிலவரங்கள் பற்றி பொதுமக்களுக்கான விளிப்புணர்வினை அதிகரிக்கச் செய்தல்.

**சட்ட திட்டம் :**

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தற் சட்ட மூலம் திருத்தப்பட்டு புதிய சட்டமூலமொன்றாக வரையப்பட்டு அது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டு அவதானிப்புப் பெறப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் கலந்துரையாடுவதற்குத் தேசிய சபை தீர்மானமெடுத்துள்ளது.

**"மகிந்த சிந்தனையின்" கீழ் அங்கவீனரைக் கொண்ட குடும்பத்திற்கு ரூபா. 3000/- மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்.**

மகிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்காக, ரூபா. 598 மில்லியன் இத் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்ட 16600 வறிய குடும்பங்களுக்கு மாதாந்தம் தலா ரூபா. 3000/- வீதம் வாழ்வாதாரக் கொடுப்பனவினை வழங்குதற்கு இயலுமாக இருந்தது. அதன் பிரகாரம் 2013 டிசம்பர் மாதம் இறுதி வரையில் ரூபா. 598 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**நடமாடும் சேவைகளில் உதவி உபகரணங்களை வழங்குதல்**

| உதவி உபகரணங்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| சக்கர நாற்காலிகள் | 771 |
| ஊன்றுகோல்கள் | 306 |
| கையூன்றுகோல்கள் | 306 |
| கிட்டப் பார்வைக்கான மூக்குக் கண்ணாடிகள் | 93397 |
| முச்சக்கர வண்டிகள் | 20 |
| கொமட்டுடன் கூடிய சக்கர நாற்காலிகள் | 53 |
| செவிப்புலக் கருவிகள் | 22 |

2013 டிசம்பர் வரையில் 168 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் உதவி உபகரணங்களுக்காக ரூபா. 24.63 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்**

வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா. 250,000/- ஐ வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2013 டிசம்பர் மாதம் வரையில் ரூபா. 73.28 மில்லியன் பெறுமதியில் அங்கவீனமுற்ற நபர்களின் வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கும் மற்றும் நிர்மாணிப்பதற்குமாக 599 வீடுகளுக்கு பண உதவி வழங்கப்பட்டுள்ளது.

| மாதம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | 08 |
| பெப்ரவரி | 65 |
| மார்ச் | 69 |
| ஏப்ரல் | - |
| மே | 201 |
| யூன் | 64 |
| யூலை | 09 |
| ஓகஸ்டு | - |
| செப்ரெம்பர் | - |
| ஒக்டோபர் | - |
| நவம்பர் | 116 |
| திசம்பர் | 67 |
| **மொத்தம்** | **599** |

## உட்பிரவேசிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம்

அரச கட்டிடங்கள் மற்றும் பொதுவிடங்களுக்கு உட்பிரவேசிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் நிகழ்ச்சித் திட்டம் 2013 செப்ரெம்பர் மாதம் வரையில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளதுடன் அந்நிகழ்ச்சித் திட்டங்களில் அந்தந்த மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர். 2013 திசம்பர் மாதம் வரையில் பின்வரும் இடங்களுக்கு உட்பிரவேசிப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**உட்பிரவேசிப்பு வசதிகள் - 2013**

| மாவட்டம் | இடம்/பிரதேச செயலகம் | நிதி |
|---|---|---|
| பொலன்னறுவை | மதிரிகிரிய | 217,338.47 |
| | பொலன்னறுவை | 321,024.70 |
| அம்பாறை | கல்முனை | 60,795.00 |
| பொலன்னறுவை | பொலன்னறுவை மா/செ | 156,958.00 |
| | அலகெர பி/செ | 28,187.20 |
| பதுளை | வலிமடை பிசெ | 7,050.00 |
| கம்பகா | மீரிகம | 45,330.00 |
| கேகாலை | வரக்காபொல | 105,221.00 |
| அனுராதபுரம் | தம்புத்தேகம | 21,122.00 |
| மொனராகல | படல்கும்புர | 50,000.00 |

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை வடக்கு | 250,000.00 |
| புத்தளம் | முந்தலம | 12,778.01 |
| கிளிநொச்சி | கண்டாவளை | 73,000.00 |
| களுத்துறை | வலல்லாவிட்ட | 45,000.00 |
| பொலன்னறுவை | மதிரிகிரிய | 98,436.37 |
| பொலன்னறுவை | மதிரிகிரிய | 21,665.73 |
| பொலன்னறுவை | லங்காபுர | 6,418.26 |
| யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 120,000.00 |
| புத்தளம் | முந்தலம | 88,948.29 |
| இரத்தினபுரி | பலாங்கொடை | 50,000.00 |
| **மொத்தம்** | | **1,831,553.03** |

**மா/செ - மாவட்டச் செயலகம்** **பி/செ. - பிரதேச செயலகம்**

## உள்ளக அமைச்சரவைக் குழு

உட்பிரவேசிப்புக் கட்டளை தொடர்பாக அனைத்து மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள், மாகாண சபையின் செயலாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு இவ் ஒழுங்கு விதிகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் உள்ளக அமைச்சுக்களின் குழு, உட்பிரவேசிப்புடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப ஆலோசனையைச் செயற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

**அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சுய தொழில் உதவியினை வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டம் - ஆகக்கூடியது ரூபா. 25,000/-**

2013 திசம்பர் மாதம் வரையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான சுய தொழில் உதவி 371 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இந் நோக்கினை மேற்கொள்வதற்குச் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா. 7.6 மில்லியனாகும்.

| மாதம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | 10 |
| பெப்ரவரி | 82 |
| மார்ச் | 31 |
| ஏப்ரல் | 60 |
| மே | 56 |
| யூன் | 81 |
| யூலை | 10 |
| ஓகஸ்டு | 04 |
| செப்ரெம்பர் | - |
| ஒக்டோபர் | 10 |

| | |
|---|---|
| நவம்பர் | 08 |
| திசம்பர் | 19 |
| **மொத்தம்** | **371** |

**நோயாளர்களுக்கு வைத்திய உதவிகளை வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டம் - ரூபா.** 20,000/-

2013 திசம்பர் மாதம் வரையில் ரூபா. 6.7 மில்லியன் 434 நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக மாற்றம், எலும்பு முறிவு மற்றும் முழங்கால் பொருத்துதல். செவி சத்திர சிகிச்சைகளுக்கும் அதேபோல மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கும் உதவி வழங்கப்படுகின்றது.

| மாதம் | உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சனவரி | - |
| பெப்ரவரி | 18 |
| மார்ச் | 51 |
| ஏப்ரல் | 74 |
| மே | 74 |
| யூன் | 31 |
| யூலை | 24 |
| ஓகஸ்டு | 11 |
| செப்ரெம்பர் | 30 |
| ஒக்டோபர் | 33 |
| நவம்பர் | 18 |
| திசம்பர் | 70 |
| **மொத்தம்** | **434** |

**அங்கவீனமுற்ற சிறார்களுக்கான கல்வி உதவி**

2013 சனவரி மாதத்திலிருந்து திசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 246 அங்கவீனமுற்ற சிறார்களுக்குக் கல்வி உதவியாக ரூபா. 1.27 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

**பிறெய்ல் முறைமை, சைகை மொழி மற்றும் இலகுவாக நடமாடுதல் தொடர்பான பாடநெறிகள்.**

I. பல்வேறு அமைச்சுக்களிலுமுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மொத்தமாக 43 பேருக்கு 2013 பெப்ரவரி 18 ஆந் திகதி 02 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இப்பாடநெறிகள் 2013 திசம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுள்ளன.

II. கல்வி அமைச்சின் 28 உத்தியோகத்தர்களுக்கு 2013 மே 05 ஆந் திகதி பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது 2013 டிசம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுள்ளது.

III. 2013 பெப்ரவரி மாதத்தில் வட மேல் மாகாணத்தின் 51 சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கு பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது 2013 யூலையில் நிறைவடைந்துள்ளது. இப்பாடநெறிகள் தொடர்பாக பிரெய்ல் முறை விஞ்ஞானம், சைகை மொழி மற்றும் இலகுவாக நடமாடுதல் போன்ற மூன்று பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலாகப் பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ன

I. அரசாங்கப் பாடசாலைகளிற் கல்வி கற்று வருகின்ற விழிப்புலனற்ற மாணவர்களின் வினாத் தாள்கள் மற்றும் விடைத்தாள்களை பிரெய்ல் முறையிலான தத்துவத்தின் பிரகாரம் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
II. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் அறிக்கைகளை பிரெய்ல் முறைமைத் தத்துவத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.
III. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விழிப்புலனற்ற மாணவர்களுக்குக் கல்வி வசதிகளை வழங்குதல்.

## தன்னார்வ அமைப்புக்களைப் பதிவு செய்தல்.

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலத்தின் 20 ஆவது பிரிவின் கீழ் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பாகப் பணியாற்றி வருகின்ற பின்வரும் தன்னார்வ அமைப்புக்கள் 2013 ஆம் ஆண்டிற் பதிவு செய்யப்பட்டுள்ளன

| | |
|---|---|
| Aloka skills Development Foundation for Disabled youth | # 41/4, Jawatta Road, Colombo 5. |
| கே. ஏ. குலரத்ன மன்றம் | இல. 28/86, றோயல் பார்க், சப்புகஸ்கந்த வீதி, கலகெடிகேன. |
| ஐக்கிய சமுதாய ஒத்துழைப்பு நிலையம் | இல. 288/4, சிங்கபுர, வக்வல்ல, காலி. |
| அபேக்ஷா கோமஸ் | உஸ்வட்டகெட்டியாவ, ருந்திரகு மாவத்தை இல. 74 மற்றும் உஸ்வட்டகெட்டியாவ இல. 46. |
| மேல் மாகாண செவிப்புலனற்ற சங்கம் | இல. 60, இரண்டாவது மாடி, மத்திய அங்காடித் தொகுதி, புகையிரத நிலைய வீதி, தெகிவளை. |
| Green Flowers Sri Lanka | 5th Cross tree, Sammanthurai. |
| Vanni Rehabilitation Organization for the Differently Abled | 4th Mile Post, Mannar Road, Pampaimadu, Vavuniya. |
| திமுத்து நிவாரணச் சேவை | கொழும்பு வீதி, பம்பல, காக்காப்பள்ளி. |
| Community Business and Technology Developers (GTE) LTD. | 11, 1st lane, Linga Nagar, Trincomalee. |
| Self Help Group for Disabled | # 79/1, Moothavinayagar Veethy, Nallur, Jaffna. |
| சுமங்க றுகுணு செவிப்புலனற்றவர்களுக்கான சங்கம் | இல. 143, காலி வீதி, வல்கம, மாத்தறை. |
| மிருனிடா கேமலதா கலை ஆச்சிரமம் | இல. 189, பழைய வீதி, நாவின்ன, மகரகம. |
| சகநோத மன்றம் | இல. 341/9, வக்வல்ல, காலி. |
| We are family foundation | #9, Dharmashrama Mawath, Borupana, Rathmalana. |
| CEREBRAL POLSY Lanka Foundation | # 127, 5/4, St. James Street, Colombo 15. |

## விக்டோரியா இல்லத்திற்கான உதவி

குணப்படுத்த முடியாத நோயாளர்களைக் கொண்டுள்ள இராஜகிரிய விக்டோரியா இல்லத்திற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா. 6.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ரூபா. 500,000.00 வீதம் இற்றை வரையில் விக்டோரியா இல்லத்தின் செலவுக்கு நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## வருடத்தின் விசேட சாதனைகள்

- சைகைமொழிக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெறும் வரையில், கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமூல வரைபு தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் ஆலோசனை மற்றும் கௌரவ சமூக சேவைகள் அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் ஒட்டிசம் (சித்தப்பிரமை) கொண்ட சிறார்களை எழுச்சி பெறச் செய்வதற்கு கல்வி, சுகாதார, சிறுவர் விருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சுடன் இணைந்து விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இது தொடர்பான இணைந்த செயற்திட்டம் தற்போது தேசியத் திட்டமிடற் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இற்றை வரையில் இவ்வாறான சிறார்களை இனங்கண்டு கொள்வதற்காக மேல் மாகாணத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

- அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு உட்பிரவேசிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாக 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உட்பிரவேசிப்புக் கட்டளைகளின் கீழ் போக்குவரத்து அமைச்சினூடாக நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பலனாக அங்கவீனமுற்றோருக்கென வசதிகளைக் கொண்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சிற்சில பேருந்துகள் பிரதான வீதிகளுக்குக் கொண்டு வரப்பட்டு பயணங்களை முன்னெடுப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே போலப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வடக்கு மற்றும் மன்னார் புகையிரத வீதியின் அனைத்துப் புகையிரத நிலையங்களிலும் உட்பிரவேசிப்பு வசதிகளுடன் கூடிய நிர்மாணிப்புக்களை மேற்கொள்வதற்குப் புகையிரதத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **அங்கவீனம் தொடர்பான தேசிய செயற்திட்டம்**

  இத்திட்டம் தொடர்பாகத் தேசிய சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அது அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- வெள்ளைப் பிரம்பு தொடர்பான அன்றாடப் பாதுகாப்பு

  வெள்ளைப் பிரம்புப் பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் மீள் அபிவிருத்திக்காகத் தயாரிக்கப்பட்டு வருகின்ற இவ்வமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# 03. அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு - CBR

### குறிக்கோள்

“அங்கவீனமுற்ற நபர்களினால் அவர்களின் உரிமைகளினை அனுபவிப்பதற்கும் மற்றும் பொறுப்புக்களினை நிறைவேற்றுவதற்கும் இயலுமான வரை புனர்வாழ்வளித்தல், அவர்களுக்குச் சம வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அவர்களினைச் சமுதாயத்தினுள் ஒன்று திரட்டுவதற்காகத் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வாய்ப்பினை ஏற்படுத்துதல்.” இதன் நோக்கமாகும்

### பின்னணி

அங்கவீனமுற்றவர்களும் சமூகத்திற் சம அந்தஸ்து உள்ள அங்கத்தவர்களாவதுடன், சமுதாயத்தில் அவர்களுக்குச் சமமான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதுடன், அவர்களுக்குப் பக்கபலமாக அமையும் பொதுக்கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, நுழைவு வசதி, நலன்புரி மற்றும் வேறு எவ்வித தேவை ஒன்றாயினும் நிலவுகின்ற கட்டமைப்பினுள் ஏனையவர்களுக்கு வழங்கப்படுவதனைப் போன்று சமமான விதத்தில் வழங்கப்பட வேண்டும் என்பது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகவாழ்வுக்கான உரிமையாகும். சமூக சேவைகள் அமைச்சானது இன்று நாடு முழுவதிலும் 25 மாவட்டங்களிலும் தெரிவு செய்துள்ள 331 பிரதேச செயலகப் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது. அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம், இச் சக வாழ்வுக்கான உரிமை பாதுகாக்கப்படுகின்றதா, உறுதிப்படுத்தப்படுகின்றதா எனச் சமூக சேவைகள் அமைச்சின் கீழே அமுற்படுத்தப்படுகின்ற முன்னுரிமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றாக அடையாளப்படுத்த முடியும்.

அங்கவீனமுற்ற அனைத்து நபர்களினால் அவர்களின் உரிமையினை அனுபவிப்பதற்கும் மற்றும் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கும் இயலுமானதாக விருத்தி செய்தல், அவர்களுக்குச் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அவர்களைச் சமுதாயத்துடன் ஒன்றிணைப்பதற்கான சமுதாய அபிவிருத்தியினூடான செயற்பாடே சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வாக வரைவிலக்கணப்படுத்த முடியும். இந்நிகழ்ச்சித் திட்டங்களிற் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய ரீதியிற் பல்வேறு மட்டங்களிற் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வளதாரர்களைக் கொண்ட செயற்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர்கள், அவர்களின் குடும்பங்களின் அங்கத்தவர்களினைக் கொண்ட பிரதேச மற்றும் மாவட்டச் சுய உதவி அமைப்புக்களை நிறுவி அவர்களை வலுவூட்டுதல் வேண்டும் என்பதுடன் அனைத்துப் பிரிவுகளினூடாக மனித வள விருத்தி மற்றும் உளப்பாங்குகளை மாற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### செயற்பாடுகள்

1. அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அக்குடும்பங்களின் மனிதவள அறிவு உளப்பாங்குகள் மற்றும் செயற்பாடுகளினை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

2. வீடு, சமூகம், முன்பள்ளி, பாடசாலை, பல்கலைக்கழகம், கடமையாற்றும் இடம் போன்றவற்றிற் சுயமாகத் தமது கடமைகளை மேற்கொள்ளக்கூடிய நபரொருவராக உருவாக்குதவற்கு அன்றாடச் செயற்பாட்டுப் பயிற்சியினை வழங்குதல்.

3. உள்வாங்கும் கல்வி முறைமை மற்றும் விசேடக் கல்வி முறைமையினூடாக இந்த அங்கவீனமுற்ற சிறார்களுக்குக் கல்வி வாய்ப்பினை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலுடன் ஏனைய சேவைகளையும் வழங்குதல்.

4. பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்காக தொழில் அமைச்சு மற்றும் பிரத்தியேகப் பிரிவுகளுடன் இணைந்து தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழில்களுக்கான முன் ஆயத்தத்தினை மேற்கொள்ளுதல்.

5. பிரதேச மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களினூடாகத் தொழிற் பயிற்சியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

6. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களிற் காணப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களில் அங்கவீனமுற்ற நபர்களை உள்வாங்கி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் - (நாட்டின் எழுச்சி (திவி நெகும), விளையாட்டு மற்றும் கலாசாரம் போன்ற)

7. பல்வேறு சமுதாய சமய நிகழ்வுகள் – கலாசார நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சுறுசுறுப்பானவராகப் பங்குபற்றச் செய்தல்.

**இதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற முறைமை.**

- உள்ளக அமைச்சுக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கிடையே அமைக்கப்பட்ட தேசிய செயற்குழுக்களை நாளதுவரைப்படுத்துதல்.
- தேசிய செயற்குழுவில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் பிரகாரம் சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஐந்து வருடத் திட்டமொன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனைத்து மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் மாவட்டக் குழுக்களை முன்னெடுத்து இலங்கையில் அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கையினை அமுற்படுத்துவதற்கான அறிவினை நாளதுவரைப்படுத்துதல்.
- அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றுகின்ற சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அறிக்கையிடுதல் மற்றும் அட்டவணைப்படுத்தல் சம்பந்தமான சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டங்களின் புதிய அணுகுமுறை தொடர்பான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

- பிரதேச மட்டத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களை ஒன்றிணைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களிற் கிராமியத் தலைவர்களுக்கான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சுய உதவி அமைப்புக்களை நிறுவுதலும் மற்றும் வலுவூட்டுதலும்.
- அங்கவீனமுற்ற நபர்களின் பெற்றோர் அமைப்புக்களை நிறுவுதலும் மற்றும் விழிப்புணர்வூட்டுதலும்.
- தன்னார்வத் தொண்டர்களின் பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- மாகாண உதவி உத்தியோகத்தர்களுக்கு வெளிக்களப் பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- தொழிற் சந்தைகளை முன்னெடுத்தல்.

| **சி.பீ. ஆர். நிகழ்ச்சித் திட்டம் – 2013**<br>**பௌதிக முன்னேற்றம்** | | |
|---|---|---|
| 1. | வீட்டு மட்டத்திற் புனர்வாழ்வளித்தல் | 6427 |
| 2. | சமூகத்துடன் ஒன்றிணைத்தல் | 1414 |
| 3. | முன்பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை | 1143 |
| 4. | சாதாரணப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை | 727 |
| 5. | விசேட பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை | 991 |
| 6. | உளப் பயிற்சிச் சேவைகளுக்கு அனுப்புதல் | 4623 |
| 7. | வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புதல் | 1339 |
| 8. | தொழில் வாய்ப்புக்கு அனுப்புதல் | 643 |
| 9. | சுயதொழிலுக்கு அனுப்புதல் | 2725 |
| 10. | நேரடிப் பயன்களைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை | 114 |
| 11. | சுய உதவிக் குழுவினைப் பலப்படுத்துதல் | 17 |

# 04. தேசிய உளவளத்துணை சேவைகள் நிகழ்ச்சித் திட்டம்

**தொலைநோக்கு**

**"சமமான ஆளுமையுடன் கூடிய ஆரோக்கியமான தேசத்து மக்கள்"**

## பணிக்கூற்று

**உளவியல் சார்ந்த முறைமையினைப் பயன்படுத்துவதன் மூலமாக உள ஆரோக்கிய நிலைமை, உளவளசேவை, விளிப்புணர்வு, தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு, தனிப்பட்ட ஆளுமை விருத்தி என்பவற்றினூடாக விருத்தி செய்வதன் மூலமாக இலங்கையிலுள்ள மக்கள் அனைவரதும் பங்களிப்பைத் தேசிய அபிவிருத்திக்காகப் பெற்றுக்கொள்வதே எமது பணியின் நோக்காகும்.**

அமைச்சின் உளவளத்துணை நிலையம், 180 பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்களுடன் இணைந்து இப்பணியிலக்கினை அடைந்துகொள்வதற்காகப் பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

### தேசிய உளவளத்துணை நிலையத்தின் செயற்பாடுகள்.

- உளவளத்துணைச் சேவைக்கான சட்ட வரைவொன்றை வடிவமைத்தல்.
- உளவளத்துணை சேவைகளுக்கான பிரமாணங்களை உருவாக்குதல்.
- உளவளத்துணை சேவைகளில் மனித வளங்களுக்கான ஆற்றலைக் கட்டியெழுப்புதல்
- உளவளத்துணை சேவைகளை வழங்குகின்ற ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தல். (தேசிய உளவளத்துணை தினம் ஒக்டோபர் 15)
- பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களில் உளவளத்துணை சேவைகள் நிலையங்களை அமைத்தலும் மற்றும் உளவளத்துணைச் சேவையாளர்களின் சேவைகளைப் பயன்படுத்தலும்.
- அரச உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் உளவளத்துணை மற்றும் மனநோய்ச் சிகிச்சை மற்றும் அதன் பிரதிபலன்கள் பற்றி அறிவூட்டுவதன் மூலம் உளவளத்துணைச் சேவைகளை விரிவாக்குதல்.

- ❖ இயற்கையினாலும் மற்றும் மனிதனாலும் ஏற்படுத்தப்படுகின்ற இடர்களுக்கு உட்பட்ட மக்களுக்காக இடர் ஆலோசனைச் சிகிச்சைகள், திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ❖ உளவளத்துணை, உள சிகிச்சை மற்றும் அதன் பயனாளிகள் தொடர்பாகச் சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டல், பிரசுரங்களை விநியோகித்தல் (சிங்களம் மற்றும் தமிழ் மொழி)
- ❖ உளச் சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான முன்னேற்றகரமான மற்றும் பரிகார உளவளத்துணை நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ❖ 24 மணிநேரத் தொலைபேசி உளவளத்துணை சேவைகளூடாக நாடுபூராகவுமுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்களூடாகச் சமுதாயத்தினரைத் தொடர்புபடுத்தல்.
- ❖ தன்னார்வத் தொண்டர்களுள் ஆர்வத்துடன் செவிமடுப்போரை, உளச் சமூகப் பணியாளர்களாகப் பயிற்றுவித்துச் சமுதாயச் சேவைகளுக்காகத் தொடர்புபடுத்தல்.
- ❖ உளவளத்துணை தொடர்பான குறுகிய காலத்திறமைப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ❖ அரச நிறுவனங்களில் உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு மனப்பான்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- ❖ உளவளத்துணைச் சேவைகள் தேவைப்படும் அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணையாளரின் சேவையினைப் பெற்றுக்கொடுத்தல். (சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள்)

## <u>2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள்</u>

### <u>பிரதேச மற்றும் தேசிய மட்டங்களிற் சிகிச்சைசார் மற்றும் தீர்வு சார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.</u>

- I. 21 மாவட்டங்களிற் கடமையாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு 20 உளவளத்துணை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.
- II. தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களிற் கோரப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு நிதி ஒதுக்கீட்டினை வழங்குதல்.
- III. கல்வி, குடும்பம், முதியோர்கள், இளமைப்பரும் மற்றும் போதைப்பொருட்கள் தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் உளவளத்துணை வேலைத்திட்டங்கள்.
- IV. கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்திற் தங்கியிருப்போருக்கு உளவளத்துணைச் சேவைகளை வழங்குதல்
- V. அனுராதபுரம், அபிமங்சல நிரந்தரமான அங்கவீன இராணுவ வீரர்களைப் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தில் உள உடல் புனர்வாழ்வு ஆலோசனை உதவி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- VI. பிரதேச மட்டத்தில் உளவளத்துணை உத்தியோகத்தர்களினாற் கல்வி (பாடசாலைகள், முன்பள்ளிகள், அறநெறிப் பாடசாலைகள்), குடும்பங்கள் (திருமணத்திற்கு முன், திருமணமானவர், கர்ப்பிணி மாதர்), முதியோர் மற்றும் இளைஞர் போதைப்பொருளிலிருந்து மீட்சி பெறுவதற்கான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

### <u>ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள்.</u>

- I. உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களுக்கான 03 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.
- II. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான (உளவளத்துணை) திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.

III. உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (உளவளத்துணை) மாவட்ட மட்டத்திற் பணியிடைப் பயிற்சி மற்றும் முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டங்கள்.
IV. அரச நிறுவனங்களின் வேண்டுகோள்களின் பிரகாரம் விசேட உளவளத்துணைக் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டமை.
V. அரச நிறுவனங்களின் வேண்டுகோள்களின் பிரகாரம் விசேட உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.

**24 மணிநேர நடமாடும் தொலைபேசி ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்.**

i. டயலொக் கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னலினூடாக எமது உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களினால் மக்களின் உளப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உளவளத்துணைச் சேவையினை வழங்குதல்.

**வெளியீடுகளும் மற்றும் அச்சிடுதல்களும்**

i. உளவளத்துணை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்கள் 40000 அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.
ii. உளவளத்துணைத் தினம் தொடர்பான சஞ்சிகை வெளியிடப்பட்டமை.
iii. உளவளத்துணை தொடர்பாக விழிப்புணர்வூட்டுகின்ற கைநூல்கள் மற்றும் பதாதைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டமை.

**தேசிய உளவளத்துணை சேவைகள் தினத்தினை ஒட்டி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.**

i. "முதியோர்களின் உள ஆரோக்கியம் தொடர்பான உளவளத்துணை" என்ற தொனிப்பொருளினைக் கொண்டு தேசிய உளவளத்துணைச் சேவைகள் தினக் கொண்டாட்ட வைபவம் இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் 2013 ஒக்டோபர் 14 ஆந் திகதி அரச மற்றும் அரச சார்பற்ற உளவளத்துணைச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து நடாத்தியமை

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுனிசெவ் கருத்திட்டத்தின் கீழ் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.**

i. யுனிசெவ் நிதியுதவியின் கீழ் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள உள்ள மக்கள், பாடசாலைச் சிறார்கள், அரச உத்தியோகத்தர்களினை இலக்காகக் கொண்டு உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிகிச்சைகள் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ள உளவளத்துணை மற்றும் உளச் சமூகப் பணியாளர்களினூடாக அமுற்படுத்தப்பட்டமை.
ii. திடமுடன் செவிமடுப்போர்களாக மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.

**பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் - 2013**
**தேசிய உளவளத்துணை நிலையம்**

| **தொழிற்பாடுகள்** | **பௌதிக முன்னேற்றம்** | **நிதிசார் முன்னேற்றம் ரூபா.மி.** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| உளவளத்துணை மற்றும் உளவளத்துணை சிகிச்சைகள் தொடர்பான விளிப்புணர்வு நிகழ்ச்சி. தேசிய/பிரதேச மட்டம்) | 128 நிகழ்ச்சிகள் | 2.323 | 11,930 |
| 24 மணி நேரக் கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள். | 96 மாதாந்த கையடக்கத் தொலைபேசிக்கான கட்டணங்கள் | 0.15 | 2,976 |
| ஆற்றலைக்கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 61 நிகழ்ச்சிகள் | 5.37 | 2,763 |
| பிரசுரம் | 55000 துண்டுப் பிரசுரங்கள். | 0.7 | - |
| உளவளத்துணை சேவைகள் வழங்குகின்ற நிறுவனங்களைத் தொடர்புபடுத்துதல். | 11 நிகழ்ச்சிகள் | 0.5325 | 154 |
| நிர்மாணித்தல்/பழுதுபார்த்தல்/உபகரணங்களை வழங்குதல் | நிர்மாணிப்பு - 01<br>பழுதுபார்த்தல் - 10<br>உபகரணங்கள் - 13 | 2.9245 | - |

# 05. தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைப் புனர்வாழ்வளிக்கும் செயற்திட்டம்

## நோக்கம்

**விதவைகள், தபுதாரர்கள் மற்றும் கணவரினாற் கைவிடப்பட்டவர்கள் தமது வாழ்க்கையினைக் குழந்தைகளுடன் முன்னெடுத்துச் செல்வதிற் பாரிய சவால்களை எதிர்கொள்வதால், அவ்வாறான தனியான பெற்றாரைக் கொண்ட சிறார்களுக்குத் தங்களின் கௌரவம் அல்லது ஆளுமைக்கு எள்ளளவும் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாத்து அக்குடும்பங்களை இச்சமுதாய மட்டத்தில் உயர்த்துவதற்கு உதவிக் கரம் நீட்டுவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.**

## பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

- பயங்கரவாதச் செயற்பாடுகள், வன்செயல்கள், குற்றங்கள், திடீர் விபத்து, தற்கொலை போன்ற சம்பவங்களின் விளைவாகத் தமது கணவரின் திடீர் மரணம் காரணமாகக் கைவிடப்பட்ட அநாதரவற்ற பெண்களுக்காகவும், மற்றும் விசேடமாகப் பாடசாலை செல்கின்ற சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்காகவும்,

- கணவரினால் மனைவி மற்றும் பிள்ளைகள் கைவிடப்படுதல் அல்லது மனைவியினால் சிறு குழந்தைகளுடன் கணவன் கைவிடப்பட்டுள்ள குடும்பங்களுக்காகவும்,

- எந்தவொரு வருமானமுமற்ற, யாதுமொரு வயதெல்லையைக் கடந்த சட்டரீதியான முறையிற் திருமணமாகாத பெண்களுக்கும் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்காகவும்,

  மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலின் கீழ்ப் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது பாலூட்டும் தாய்மார்கள் அல்லது பாடசாலை செல்லும் சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

2001 குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் இலங்கையின் 18 மாவட்டங்களில் 209,839 தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் உள்ளனர் என்பதுடன் அதிலும் ஆகக்கூடிய தொகையினரைக் குருணாகல் மாவட்டம் கொண்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத் தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கிடையே சிறு பிள்ளைகள் மற்றும் பெண்களுமே அதிளவில் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். நிர்க்கதியாக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவர்களுக்கான புகலிடம், பாதுகாப்பு மற்றும் கௌரவத்திற்கு மிரட்டல் விடுக்கும் நிலை காணப்பட்டுள்ளது. அதற்கு மேலாகச் சிறார்களின் கல்வி மற்றும் போசாக்கிற் சிக்கல்கள் எழுந்துள்ளதுடன் அவர்கள் பல்வேறு சமுதாயத் துஷ்பிரயோகங்களுக்கும் அதிகளவில் முகங்கொடுத்த வண்ணமுள்ளனர்.

மேலும் கல்வி அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் பாடசாலை செல்கின்ற வயதினைக் கொண்ட சிறார்களில் 2% த்தினர் பாடசாலைக்குச்

செல்லாதவர்கள் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரப் பிரச்சினையே அதற்கான பிரதான காரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்பிரிவிற் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவர்களாகச் சிறார்களைக் கொண்ட தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் விளங்குகின்றனர்.

இந்நிலைமையினைத் தணிப்பதற்குப் பின்வரும் செயற்பாடுகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் மேம்பாட்டுக்காக உதவியினை வழங்கி அவர்கள் சுய தொழிலினை முன்னெடுப்பதற்கு வழிவகுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
2. சிறு குழுக்களாக ஒன்றிணைந்து மேற்கொண்டு வருகின்ற வருமானத்தினைப் பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சுயதொழில் உதவிகளை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
3. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் தாய்மார்/தந்தையரின் பொருளாதார வலுவினை மேம்படுத்துதல், குடும்பத்தின் வலுவூட்டலுக்காக நிறைவேற்ற வேண்டிய பணி மற்றும் சமூகப் பொறுப்புத் தொடர்பாக அவர்களை விழிப்புணர்வூட்டி அவர்களின் பொருளாதார நிலைமையினை உயர்த்திச் சிறார்களின் கல்வியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அறிவினை வழங்குதல், அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல் மற்றும் இனங்காணப்பட்டுள்ள கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குடுபம்பங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்ப அலகுகளிற் தொழிலற்ற தன்மையினைக் குறைத்து அவர்களைத் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக ஆக்குவதனூடாகச் சமுதாயத்திற் பங்களிப்பினை நல்கக்கூடிய நபர்களின் தொகுதியொன்றை உருவாக்குதல் என்பது இந் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதனூடாக மேற்கொள்ளப்படும் மிகப் பாரிய சேவையொன்றாகும்.

**பௌதிக மற்றும் நிதி சார் முன்னேற்றம் - 2013 டிசம்பர் 31 ஆந் திகதி வரை.**

| நிகழ்ச்சித் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதிசார் ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்குச் சுய தொழில் உதவி வழங்குதல்.<br>உதாரணம் - கால்நடைகளை வளர்த்தல், மரக்கறிப் பயிர்ச் செய்கை, உடைகளைத் தைத்தல், நடைபாதையோர வியாபாரம், சில்லறை வியாபாரம், உணவு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்தல் போன்ற கருத்திட்டங்கள். | 621 குடும்பங்கள் | 5875000.00 |
| 2. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் சிறு குழுக்கள் கருத்திட்ட | 18 நிகழ்ச்சித் திட்டங்கள் | 1025000.00 |

| | | |
|---|---|---|
| விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.<br>உதாரணம் - குழுக்களாக ஒன்றிணைந்து கயிறு திரித்தல், உடைகள் தைத்தல், தேயிலைப் பயிர்ச் செய்கை, சுவையான பலகாரங்கள் தயாரித்தல் போன்ற கருத்திட்டங்கள். | 52 குடும்பங்கள் | |
| 3. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்.<br>உதாரணம் -<br>• கருத்திட்டங்கள் தொடர்பாகத் தேவையான தொழிற்நுட்ப அறிவினை வழங்குவதற்காக நடாத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். உதாரணம் - சப்பாத்து உற்பத்தி, யோக்கட் தயாரிப்பு, கைப்பணிப்பொருட்களை உற்பத்தி செய்தல், சுவையான பலகாரங்களைத் தயாரித்தல்.<br>• அடையாளங் காணப்பட்டுள்ள கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய குடும்பங்களை ஒன்றிணைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். உதாரணம், குடும்பப் பிளவுகள், விவாகரத்தின் காரணமாகக் குடும்பங்களுக்கு ஏற்படுகின்ற இடர் நிலைமையினைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• குடும்பத்தினை வலுவூட்டுதல் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய கடமை மற்றும் சமூகப் பொறுப்புத் தொடர்பாக அவர்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள். | 06 நிகழ்ச்சித் திட்டங்கள்<br><br>06 பிரதேச செயலகங்கள்<br><br>பயனாளிகள் - 265 நபர்கள் | 100,000.00 |
| **மொத்தம்** | | 7,000000.00 |

**2013 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் அளவு - ரூபா. 7 மில்லியன்**

**2013 ஆம் ஆண்டுக்காக மாவட்ட மட்டங்களிற் சுய தொழில் உதவிகள் வழங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை.**

| **இலக்கம்** | **மாவட்டம்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | கம்பகா | 80 |
| 02. | புத்தளம் | 26 |
| 03. | கொழும்பு | 43 |
| 04. | காலி | 36 |
| 05. | இரத்தினபுரி | 34 |
| 06. | களுத்துறை | 57 |
| 07. | பொலன்னறுவை | 14 |

| | | |
|---|---|---|
| 08. | கேகாலை | 14 |
| 09. | அனுராதபுரம் | 07 |
| 10. | குருனாகல் | 11 |
| 11. | மாத்தளை | 02 |
| 12. | மாத்தறை | 06 |
| 13. | மொனராகலை | 13 |
| 14. | கம்பாந்தோட்டை | 10 |
| 15. | அம்பாறை | 71 |
| 16. | நுவரெலியா | 10 |
| 17. | பதுளை | 09 |
| 18. | கண்டி | 09 |
| 19. | யாழ்ப்பாணம் | 25 |
| 20. | முல்லைத்தீவு | 65 |
| 21. | மன்னார் | 72 |
| 22. | கிளிநொச்சி | 46 |
| 23. | வவுனியா | 08 |
| 24. | மட்டக்களப்பு | 07 |
| | முழு மொத்தம் | 675 |

சிறு குழுக்களின் சுய தொழிற் கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு - 2013.

| **மாவட்டம்** | **பிரதேச செயலகம்** | **கருத்திட்டம்** | **கருத்திட்டம் இடம்பெற்று வருகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை** | **ஒதுக்கீட்டின் அளவு** |
|---|---|---|---|---|
| கம்பகா | கட்டான | ஆடைகளைத் தைத்து விற்பனை செய்தல். | 5 | 50,000.00 |
| இரத்தினபுரி | அயகம | தேயிலைப் பயிர்ச்செய்கை | 3 | 30,000.00 |
| மொனராகலை | கதிர்காமம் | பூசைக்கான பொருட்களைக் கொண்டு செல்வதற்கான பெட்டியினை விற்பனை செய்தல். | 4 | 40,000.00 |
| குருனாகல் | மாஸ்பத்த | ஆடைகளைத் தைத்து விற்பனை செய்தல். | 3 | 30,000.00 |
| பலபிட்டிய | மாத்தறை | கயிறு திரித்தல் | 10 | 150,000.00 |
| யாழ்ப்பாணம் | கரவெட்டி | பால் கறக்கும் மாடுகள் வளர்ப்பு | 4 | 40,000.00 |
| யாழ்ப்பாணம் | சங்கானை | கோழி வளர்ப்பு | 5 | 50,000.00 |
| முல்லைத்தீவு | | பால் கறக்கும் மாடு வளர்ப்பு | 5 | 50,000.00 |
| மன்னார் | நானாட்டான் | கோழி வளர்ப்பு | 7 | 70,000.00 |
| மன்னார் | நானாட்டான் | கோழி வளர்ப்பு | 6 | 60,000.00 |

**தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்குச் சுய தொழில் உதவிப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காகப் வழங்கப்பட்ட ஒதுக்கீடு - 2013.**

| மாவட்டம் | பிரதேச செயலகம் | கருத்திட்டம் | ஒதுக்கீட்டின் அளவு |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | தொழில்நுட்ப மற்றும் தொழில் சார் அறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | 9500.00 |
| மாத்தறை | அக்குரஸ்ஸ | உள ஆரோக்கிய விருத்தி மற்றும் சிறு குழுக்கள் கருத்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள். | 19,300.00 |
| களுத்துறை | மத்துகம | தொழில்நுட்ப மற்றும் தொழில் சார் அறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் - சப்பாத்துத் தயாரிப்பு. | 51,660 |
| காலி | பலபிட்டிய | பயனாளிகளுக்குத் தொழில்நுட்ப மற்றும் தொழில் சார் அறிவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | 5000.00 |
| மாத்தறை | வலிபிட்டிய | தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் அங்கத்தவர்களின் உளப்பாங்கு விருத்தி மற்றும் பிரிந்து செல்லும் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டம். | 10,000.00 |

தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்ப அலகுகளிற் தொழிலின்மையினைக் குறைத்து அவர்களைத் தேசிய அபிவிருத்தியிற் பங்குதாரர்களாக்குவதுடன், சமுதாய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற பிரிவினராக அவர்களை உருவாக்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதனூடாக இடம்பெறுகின்ற மிகப் பெரிய பணியொன்றாகும்.

# 6 சிசுநன புபுதுவ நிகழ்ச்சித் திட்டம் (மாணவர்களுக்கிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துதல்)

## அறிமுகம்

மின் பொறியமைப்புக்குள் நீண்ட நேரம் சிறுவர்கள் நேரத்தினைச் செலவிடுவதால் அவர்களின் வாசிப்புப் பழக்க வழக்கங்கள் மற்றும் சிந்திக்கின்ற ஆற்றல் நலிவடைந்து வருகின்றன. அதன் பெறுபேறாக இளைய சமுதாயம், சமூகப் பெறுமதிகள், விழுமியங்கள் மற்றும் பயபக்தியினைப் புறக்கணித்து, வேலையற்று சுற்றித் திரிகின்றனர். வாசிப்புப் பழகத்திலிருந்து சிறார்கள் புறம்பாக இருப்பதே இதற்கான காரணம் எனச் சமூக சேவைகள் அமைச்சின் மூலம் நடாத்தப்பட்ட ஆய்வின் மூலம் புலனாகின்றது.

அதன் பிரகாரம், சிறார்களின் வாசிப்பின் பால் அதிக கவனத்தினைச் செலுத்துவதனூடாகச் சிறார்களின் சிந்திக்கும் ஆற்றலினை மேம்படுத்துவதற்குச் சமூக சேவைகள் அமைச்சினூடாகச் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றாகச் "சிசுனன புபுதுவ" என்ற பெயரில் இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கையிற் குறைந்த வசதிகளைக் கொண்ட பிரதேச செயலகங்களிற் பொருத்தமான கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றைத் தேர்ந்தெடுத்து அங்கு வசிக்கும் தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபாட்டினைக் கொண்ட பத்துத் தலைவர்களுக்கு இரண்டு நாட் பயிற்சியொன்றை வழங்கி ரூபா. 50,000/- பெறுமதியான புத்தகங்கள் மற்றும் உருக்கு அலுமாரி ஒன்றும் வழங்குகின்ற செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வாசிப்பவர் எடுத்துச் செல்லும் புத்தகங்கள் கட்டாயமாகப் புரிந்துணர்வுடன் வாசிப்பதற்கான முறைமையொன்றைத் தயாரித்திருத்தல் என்பது இங்கு விசேடமானதாகும்.

### 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையங்கள்.

| இல. | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவு | பயன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01. | புத்தளம் | ஆனமடுவ | ஆலங்குலம | 150 |
| | | | 7 கிராமம் | 157 |
| | | தங்கொட்டுவ | குடவில | 118 |
| | | சிலாபம் | திம்பில்ல | 84 |
| 02. | அம்பாறை | லாகுல | பானம | 143 |
| | | தமன | மொரககபாலம | 161 |
| 03. | பொலன்னறுவை | திம்புலாகல | பகல அல்லேவவ | 118 |
| 04. | களுத்துறை | மத்துகம | ஒவிட்டிகல | 202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 05. | குருனாகல் | ரிதிகம | ரத்விற்ற | 214 |
| 06. | கம்பகா | மீரிகம | கீணதெனிய | 211 |
| | | கம்பகா | கெசல்வத்துகொட | 247 |
| | | ஜா-எல | துடெல்ல | 210 |
| | | | ராகம | 198 |
| | | தொம்பே | உடவெல | 164 |
| | | கம்பகா | பகலகொடயய | 207 |
| 07. | மொனராகலை | படல்கும்புர | நக்கல | 221 |
| | | | வெகரகொட | 243 |
| | | மொனராகலை | மதுறுகெட்டிய | 85 |
| 08. | இரத்தினபுரி | கொலன்ன | மடுவன்வல | 350 |
| | | குருவிட்ட | பட்டதொட்ட | 314 |
| | | அலபாத்த | தம்புலுவன | 297 |
| | | பலாங்கொடை | வெலிபத்தயய | 371 |
| 09. | பதுளை | வெலிமடை | திவிதொட்டவெல | 211 |
| 10. | கண்டி | பாத்ததும்பர | மககும்புர | 187 |
| | | பன்வில | மகபதயாய | 251 |
| 11. | கேகாலை | கேகாலை | உந்துகொட | 201 |

# 7. சமூகப் பராமரிப்பு நிலையக் கருத்திட்டம்

**இலக்கு**

**பொறுப்பான சமுதாயமொன்றினை உருவாக்குதல்**

## நோக்கங்கள்

பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள சமூகப் பராமரிப்பு நிலையத்திற்கு/கிளைக்கு வருகை தரும் சேவைநாடியினர்களுக்கு பரந்துபட்டதும் மற்றும் இணைந்ததுமான சமூக நலன்புரிச் சேவையொன்றினை வழங்குதல்.

2005.12.14 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்திற் கொள்கை தொடர்பான சமூகப் பராமரிப்பு நிலையக் கருத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் சமூகப் பராமரிப்பு நிலையங்களை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு சிநேகபூர்வமான சூழலிற் சேவைநாடுவோருக்கு ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பராமரிப்புப் பொதியொன்றினை வழங்குவதே சமூகப் பராமரிப்பு நிலையங்களைத் தாபிப்பதன் நோக்காகும். இந்நிலையத்தின் அனைத்து நலன்புரித் தேவைப்பாடுகளையும் ஒரே இடத்திற் பெற்றுக்கொள்ள முடியும். விசேடமாக ஆபத்துக்குள்ளானவர்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதனூடாக அவர்களைப் பிரதான அபிவிருத்தி நோக்குக்கினுள் ஒன்றிணைத்து உதவுவதற்கு முடியுமாக இருந்தது. அதே போலச் சமூகப் பராமரிப்பு நிலையங்கள் பல பாதிப்புக்குள்ளான சமுதாயத்தினருக்கு ஒரு பாதுகாப்பான வலையாகத் தொண்டாற்றுகின்றன. இணைந்த மற்றும் தற்போதைய சேவைகள் வழங்கலினை அடையாளங்கண்டு கள உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல், சமூகப் பராமரிப்புக் கருத்திட்டத்தின் பிரதான நோக்காகும்.

சமூக சேவைகள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் கூட்டு முயற்சியுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுற்படுத்தப்பட்டு வருகின்றதுடன் அந்நிறுவனங்களிற் பின்வரும் உத்தியோகத்தர்கள் இணைந்து சேவைகளை வழங்கி வருகின்றனர்.

01. சமூக சேவைகள் உத்தியோகத்தர் (மத்திய அரசு/மாகாண)
02. உளவளத்துணை உதவியாளர்கள்
03. முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
04. சமூக அபிவிருத்தி உதவியாளர்
05. மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
06. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
07. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்
08. நிவாரணம் வழங்கும் உத்தியோகத்தர்கள்

அதே போல நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்களின் சேவையும் பெறப்பட்டு வருவதுடன், இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல நிலையங்கள் மற்றும் சமூகப் பராமரிப்பு நிலையம்/கிளைகளில் ஏனைய பல கள உத்தியோகத்தர்களும் அந்தந்தப் பிரதேச செயலாளர்களினால் இணைக்கப்பட்டுள்ளனர்.

கருத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 2008 ஆம் ஆண்டின் முடிவில் யுனிசெவ் மற்றும் இலங்கையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு ஆகியனவற்றின் அனுசரணையின் கீழ் 27 பிரதேச செயலகங்களிற் சமூகப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் சேவைகள் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமூகப் பராமரிப்பு நிலையங்கள் வெற்றிகரமான முன்னேற்றமொன்றைக் காட்டியுள்ளதால் வேறான கட்டிடங்களை நிர்மாணிக்காது ஏனைய பிரதேச செயலகங்களிற் சமூகப் பராமரிப்பு எண்ணக்கருவினை அமுறப்படுத்துதல் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் 96 சமூகப் பராமரிப்பு நிலையங்கள்/கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், 2012 ஆம் ஆண்டிற் கண்டி மாவட்டத்தின் 08 பிரதேச செயலகங்களுக்கும், பதுளை மாவட்டத்தில் மீதியாகவுள்ள பிரதேச செயலகங்களுக்கும் கருத்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை கருத்திட்டம் ஆரம்பம் வரை சேவைநாடுவோரை அடிப்படையாகக் கொண்டு நபர்களுக்குச் சேவை வழங்குதல் இடம்பெறுவதுடன் உரிய கள உத்தியோகத்தர்கள் இவ் எண்ணக்கருவினைப் பயன்படுத்திக் குடும்பத்தினை அடிப்படையாகக் கொண்டு இணைந்த சேவைகளை வழங்குதலும் இடம்பெற்று வருகின்றது. அது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன் விருத்தி அமைச்சினால் மேலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் - 2013**

அரச பங்களிப்பு - ரூ. 5 மி.

**திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

இதன் கீழ் 2013 ஆம் ஆண்டிற் காலி மாவட்டத்திற் சமூகப் பராமரிப்பு நிலையங்களுக்கிடையே அனுபவங்களைப் பரிமாறுதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித் திட்டமொன்று மாவட்டச் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக 50 கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர். இதற்குச் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 49,750/- ஆகும். இதற்கு மேலாகப் பயிற்சி மாதிரியொன்றைத் தயாரிக்கும் வேலைத்திட்டமும் நடாத்தப்பட்டுள்ளது.

## சமூகப் பராமரிப்புக் கிளையினை நிர்மாணித்தல்.

பின்வரும் பிரதேச செயலகங்களிற் சமூகப் பராமரிப்பு அலகினை அமைப்பதற்கு இவ்வருடத்தின் ஒன்றிணைந்த நிதியத்தின் ஒதுக்கீடுகளில் ரூபா. 1,949,104/- செலவு செய்யப்பட்டுள்ளது.

| பிரதேச செயலகம் | | ஒதுக்கீடு (ரூபா.) |
|---|---|---|
| 01. | பன்வில | 52,415/- |
| 02. | தனமல்வில | 604,960/- |
| 03. | வெல்லவாய | 300,000/- |
| 04. | பிபில | 167,295/- |
| 05. | பஸ்ஸறை | 177,544/- |

| | | |
|---|---|---|
| 06. | எலகெர | 300,000/- |
| 07. | திம்புலகல | 346,890/- |
| 08. | கபராதுவ (மேம்படுத்துதல்) | 320,000/- |
| 09. | அக்குரண (மேம்படுத்துதல்) | 65,000/- |

தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் 13 சமூகப் பராமரிப்பு நிலையங்களின் நிர்வாக மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்கு 2013 டிசம்பர் மாதம் வரை ரூபா. 2.486 மில்லியன் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**யுனிசெவ் பங்கீடு - ரூபா. 6,709,590.84/-**

மேற்குறிப்பிட்ட பணத்தில் ரூபா. 5,068,798.17/- சமூகப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது.

## முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.

முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்று நுவரெலியா மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலாளர், நன்னடத்தை ஆணையாளர் (மத்திய), உதவிப் பிரதேச செயலாளர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நுவரெலியாவில் நடாத்தப்பட்டது. பங்குபற்றிய களத்துறை உத்தியோகத்தர்கள் 27 பேர் ஆவர். இதற்காகச் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை 34,965/- ஆகும்.

## உள சமூக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் சேவைக்காக 20 உள சமூக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்காக 02 பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்குச் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 44,900/- ஆகும். அதற்கு மேலாகப் பளை பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உளவளத்துணை தொடர்பான ஒரு நாள் வேலைத்திட்டம் 02 தடவைகள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்குச் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா.73,447/- ஆகும்.

**உபகரணங்களை வழங்குதல்.**

கணனிகள், கணனி மேசைகள் மற்றும் கதிரைகள் என்பன சமூகப் பராமரிப்புக் கிளைகளின் பயன்பாட்டிற்காகப் பதுளை மற்றும் மொனராகலைப் பிரதேச செயலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் பதுளை மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களுக்கு 05 கணனிகளும், அம் மாவட்டத்தின் 10 பிரதேச செயலகங்களுக்கும் மற்றும் மொனராகலை மாவட்டத்தின் 10 பிரதேச செயலகங்களுக்கும் மேசைகள், கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன. மொனராகலை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு 02 கணனிகளும், அம்மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்கள் மற்றும் பதுளை மாவட்டத்தின் 10 பிரதேச செயலகங்களுக்கும் அச்சு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

சமூகப் பராமரிப்புக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குச் சமூகப் பராமரிப்பு எண்ணக்கரு மற்றும் பயன்பாடு தொடர்பான 03 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பொல்கொல்ல கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்திற் கண்டி,மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் கள உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 451,267/- ஆகும். 231 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர். பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 7 பிரதேச செயலகங்களின் கள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது. .அதற்குச் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா.131,345/- ஆகும். அம்பாறை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகங்களின் சிங்கள மொழி பேசும் 29 களத்துறை உத்தியோகத்தர்களுக்காக மேலும் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதற்குச் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா. 80,390/- ஆகும். குழுவினைக் கட்டியெழுப்புதல், சமூகப் பணி, விடய முகாமைத்துவம், விடய மகாநாடுகள், குடும்பக் குழு மகாநாடுகள், அறிக்கையிடுதல் போன்ற தலைப்பின் கீழ் உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

## பயிற்சிக்கான அலகுகளைத் தயாரித்தல்.

**TOT** பயிற்சி அலகு (ஆங்கிலம்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் திறன் விருத்திப் பயிற்சி அலகு (வரைபு) இக்காலப்பகுதியிற் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஊறு விளைவிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வருமானத்தினைப் பெருக்குவதற்கு உதவுதல்.

2013 ஆம் ஆண்டின் முடிவில் முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள 44 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வருமானத்தினைப் பெருக்கும் செயற்பாடுகளுக்காக உதவி வழங்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட மொத்தப் பணம் ரூபா. 1,174,505/- ஆகும்.

| மாவட்டம் | பிரதேச செயலகம் | குடும்பங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | 08 | 320,000/- |
| | பதவி சிறிபுர | 02 | 50,000/- |
| திருகோணமலை | கந்தளாய் | 02 | 50,000/- |
| | கிண்ணியா | 02 | 50,000/- |
| | கல்முனை | 05 | 125,000/- |
| அம்பாறை | தமன | 08 | 159,000/- |
| | காரைதீவு | 17 | 420,000/- |

### பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் 21 பிரதேச செயலகங்களுக்கு அதாவது கந்தகெட்டிய, மீகககியூல, கல்துமுல்ல, சொரணதொட்ட, ரிதிமலியட்ட, ஹாலி எல. ஹப்புத்தளை, மகியங்கனை, பஸ்ஸர, ஊவா பரணகம, செவனகல, படல்கும்புர, மதகம, தணமல்வில, பிபில, மடுல்ல, மொனராகலை, வெள்ளவாய, புத்தள மற்றும் கதிர்காமம் போன்றவற்றிற்கு (ரூபா. 5000/- வீதம்) ரூபா. 100,000/- விடுவிக்கப்பட்டுள்ளது.

**சமுதாயத் தலைவர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள்.**

இதன் கீழ் பண்டாரவளை, பஸ்ஸறை, கப்புத்தளை,வெலிமடை, காலி- எல,மொனராகலை, மடுல்ல, தனமல்வில,வெள்ளவாய மற்றும் படல்கும்புர போன்ற பிரதேச செயலகங்களின் சமுதாயத் தலைவர்களுக்கு சமூகப் பராமரிப்பு நிலையங்களினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ரூபா. 10,000/- வீதமாக, மொத்தம் ரூபா. 100,000/- விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல ஊவ பரணகம, லுணுகல, எல்ல, பதுளை, மகியங்கன, செவனகல, மதகம, பிபில, புத்தள மற்றும் கதிர்காமம் போன்ற பிரதேச செயலகங்களிற் சமுதாயத் தலைவர்களுக்குச் சமூகப் பராமரிப்பு நிலையங்களினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்கு ரூபா. 10,000/- வீதம் பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக மொத்தம் ரூபா. 100,000 பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**சமூகப் பராமரிப்பு அலகுகளை நிறுவுதல்.**

2013 ஆம் ஆண்டில் வெள்ளவாய, புத்தள, தனமல்வில, மடுல்ல, மதகம, உடுநுவர, பதுளை, பானதும்பர மற்றும் ரிதிமலியத்த போன்ற பிரதேச செயலகங்களிற் பெயர்ப் பலகைகளைப் பொறிப்பதற்கு ரூபா. 54,483/- செலவு செய்யப்பட்டுள்ளது மற்றும் பழுதுபார்த்தற் தேவைகளுக்காக ரூபா. 201,819/- ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சமூகப் பராமரிப்புக் கிளைகளை நிறுவுவதற்குப் பின்வரும் முறையிற் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது.

| பிரதேச செயலகப் பிரிவு | தொகை (ரூபா.) |
|---|---:|
| எல்ல | 448,853.43/- |
| பதுளை | 206,608/- |
| பாத்ததும்பர | 65,000/- |
| உடபலாத்த | 65,000/- |

இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துப் பயிற்சியளித்தலிலும் இறுதி நோக்கம் கிராமிய மட்டங்களிற் சேவைநாடுவோருக்குச் சிறந்த சேவைகளை வழங்குதலாகும். ஒரு குழுவாக உத்தியோகத்தர்கள், குடும்ப எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு சிறந்த சேவையினை வழங்க முடியும்.

ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளினூடாகப் பல்வேறு அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பிரச்சினைகள், பலவீனங்கள் மற்றும் அரச நிதிகளின் விரயம் என்பனவற்றினை இனங்காணக்கூடியதாக உள்ளது அதன் மூலம் அவர்களுடைய சேவைகளை வினைத்திறன் மற்றும் விளைதிறனுடன் சமுதாயத்தில் மிகவும் ஊறுவிளைவிக்கப்பட்டவர்களுக்கு வழங்க முடிந்தது. தொடர்ச்சியான கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களிற், பிரதேச செயலக மட்டத்தில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது.

# 8. கணக்குகள் பிரிவு

**பணிக்கூற்று**

**“அரச கொள்கைகளின் அடிப்படையில் அபிவிருத்திக் கொள்கைகளை அமுற்படுத்துவதற்காகச் சரியான வகையில் நிதியினைப் பயன்படுத்துவதற்கான செலவு மதிப்பீட்டினை நிதிப்பிரமாணங்களுக்கு ஒப்பவும், தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுங்கமைக்கப்பட்ட பிரமாணங்களுக்கொப்பவும் பொது/நிதிக் கொள்கைகளுக்கமைய வழி நடாத்தப்படும் சுற்றுநிருபங்களுக்கொப்பவும், வலுமிக்கதும், திறமை, வினைத்திறன் கொண்டதுமான பொது நிதி முகாமைத்துவச் செயற்பாட்டிற்கான பங்களிப்பை வழங்குதல்,”**

### பிரதான நோக்கங்கள்

2013 ஆம் ஆண்டிற் சமூக சேவைகள் அமைச்சின் சமூக அபிவிருத்தித் தொலைநோக்கு மற்றும் பணி தொடர்பான நிதிப்பிரமாணம் 135 கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

- ❖ அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களைச் சரியாகவும் மற்றும் நாளதுவரை கணக்கிடுதலும் மற்றும் கணக்குகளினை முன்வைத்தலும்.
- ❖ நிதி ஏற்பாட்டினைத் திட்டமிடுதலும் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை வலுவூட்டுதலும்.
- ❖ அனைத்துப் பெறுகைகள் மற்றும் செலவுகளைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்துதல்.
- ❖ செலவுகளை மீளாய்தலும் மற்றும் முன்மொழிவுகளை முன்வைத்தலும்.
- ❖ திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கு இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்தலும் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளும்.

## பிரதான செயற்பாடுகள்

1. வருடாந்தம் தயாரிக்கப்பட்ட வரைபு மதிப்பீட்டினைத் தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தலும், அதற்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை நிறைவேற்றலும்.

   2014 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடுதல், சமூக சேவைகள் கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையிலும், கௌரவப் பிரதியமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உத்தியோகத்தர்களின்

பங்குபற்றுதலுடனும் 2013.08.21 ஆந் திகதி நிதித் திட்டமிடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

2. தேசியப் பாதீட்டுத் திணைக்களத்தினூடாக மேலதிக ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை.
அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சின் செலவினத் தலைப்பு 124 இன் கீழ் பெற்றுக் கொண்ட ஒதுக்கீடுகளின் விபரங்கள் பின்வருமாறு.

| செலவினத்தின் வகை | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் ரூபா. | மேலதிக ஏற்பாடுகள் ரூபா. | மொத்த ஏற்பாடுகள் ரூபா. | 2013 ஆண்டின் மொத்தச் செலவினம். |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 3,144,903,800/- | 18,671,000/- | 3,163,574,800/- | 2,864,614,232/- |
| மூலதனச் செலவினம் | 343,356,200/- | 27,300,000/- | 370,656,200/- | 263,163,620/- |
| மொத்தச் செலவினம் | 3,488,260,000/- | 45,971,000/- | 3,534,231,000/- | 3,127,777,852/- |

**இம்மொத்த ஏற்பாடுகளில் பிரதேச செயலகங்களுக்கு ரூபா. 2.898 மில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காகவும், ரூபா. 10 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.**

2013 ஆம் ஆண்டிற் பாதீட்டுப் பிரேரணையினை நடைமுறைப்படுத்துதலின் கீழ்ப் புதிய கருத்திட்டமொன்றாகத் “திரிசவிய” கருத்திட்டத்திற்கு ரூபா 123 மில்லியனும் மற்றும் தற்போது பொதுசன உதவி மற்றும் சமுர்த்தி உதவியினைப் பெறுகின்ற 70 வயதினைத் தாண்டிய 230,000 முதியோர்களுக்கு ரூபா. 1000/- மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 1300 மில்லியன் வரை அதிகரிப்பதனூடாகவும் இவ்வருடத்தின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா. 2,847 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதால் 2012 ஆம் ஆண்டினை விட மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு ரூபா. 2,159.37 மில்லியன் வரை உயர்ந்துள்ளது.

3. பொதுத்திறைசேரித் திணைக்களத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதியினைச் சரியான முறையிற் பெற்றுக்கொள்ளலும், மற்றும் முகாமை செய்தலும்.
2013 ஆம் வருடத்தின் டிசம்பர் மாத இறுதியளவிற் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியின் அளவு பின்வருமாறு.

| **மீண்டுவரும் ரூபா** | **மூலதனம் ரூபா** | **முற்பண பீ கணக்கு ரூபா** | **வெளிநாட்டு நிதியம் (யுனிசெவ்) ரூபா** | **மொத்தக் கட்டுநிதியின் அளவு ரூபா** |
|---|---|---|---|---|
| 907,472,999/- | 46,400,000/- | 3,000,000/- | 10,880,520/- | 967,753,519/- |

4. அமைச்சின் உத்தியோகத்தர் குழாமுக்கு மாதாந்த வேதனம் மற்றும் கொடுப்பனவுகளினைத் தயாரித்தலும், கொடுப்பனவுச் செயற்பாடுகளை மேற்கொள்ளலும்.
2013 ஆம் ஆண்டின் சேவையாளர்களின் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக ரூபா. 100.05 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வேதனம் மற்றும்

கொடுப்பனவுகளுக்காக டிசம்பர் மாத முடிவில் ஈடுசெய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு ரூபா. 97.12 மில்லியன் ஆகும்.

5. ஏனைய அனைத்து மீண்டுவரும் மற்றும் மூலதனக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களினைப் பரீட்சித்தல் மற்றும் உரிய செலவுத் தலைப்பின் கீழ் உறுதிப்படுத்துதல், கொடுப்பனவினை மேற்கொள்ளல் மற்றும் கணக்கீட்டினை மேற்கொள்ளல்.
6. மாதாந்தக் கணக்குப் பொழிப்பினைத் தயாரித்தல், அறிக்கைகளினை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கு மாதாந்த அறிக்கைகளை முன்வைத்தல்.
7. அமைச்சின் உத்தியோகத்தர் குழாமுக்கு இடர் கடன் நிதி, பண்டிகை முற்பணம் வழங்குதல் மற்றும் அதற்குரிய தவணை வட்டியினை அறவிட்டு அதனை முகாமை செய்யும் கணக்கு மற்றும் பதிவேடுகளை ஆரம்பித்துச் செல்லல்.
2013 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத முடிவின்போது அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் ரூபா. 4.11 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. ரூபா. 4.37 மில்லியன் மாத்திரமே முற்பணக் கணக்கிலிருந்து அறவிடப்பட்டது.

8. அமைச்சினூடாக அறவிடப்பட வேண்டிய அனைத்துப் பெறுகைகளின் மொத்தத்தொகையை, வங்கிக்கு வைப்புச் செய்தல், மற்றும் உரிய வருமானத் தலைப்புக்களின் கீழ் கணக்கீட்டினை மேற்கொள்ளல்.

9. வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கினைத் தயாரித்தல் மற்றும் ஒவ்வொரு வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பதாகக் கணக்காய்வு அதிபதிக்கு முன்வைத்தல்.
ஒதுக்கீட்டுக் கணக்கினூடாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அனைத்துச் செலவுகளை ஈடு செய்வது தொடர்பான கணக்குகளை முன் வைத்தல் இடம்பெறுகின்ற உரிய வருடத்தின் சொத்துக்களை கொள்ளல். பொறுப்புக்களின் விபரங்கள் அதே போல அகற்றுகின்ற சொத்துக்கள் தொடர்பான அறிக்கையினை அதில் உள்ளடக்குதல்.

10. 2013 ஆம் ஆண்டிற் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல், கொள்வனவு செய்வது தொடர்பான கேள்வி அறிவித்தற் செயற்பாடு இடம்பெறுதல் மற்றும் அதற்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாட்டினை நிறைவேற்றுதல்.

11. அனைத்துச் செலவுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கான விளக்கமளித்தல் மற்றும் அதற்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாட்டினை நிறைவேற்றுதல்.

12. வருடாந்தப் பொருட்களுக்கான ஆய்வினை மேற்கொள்ளல், பதிவேடுகளினை நாளதுவரைப்படுத்துதல் மற்றும் அகற்றப்பட வேண்டிய பொருட்களை இனங்காணுதல் மற்றும் அகற்றுதற் செயற்பாடு இடம்பெறுதல் இற்றைவரை 2013 ஆம் ஆண்டின் அகற்றப்பட வேண்டிய பொருட்களை இனங்கண்டு அகற்றுதல் செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

13. அமைச்சின் நுகர்வு, மூலதனப் பொருட்கள், களஞ்சியத்தினை முன்னெடுத்துச் செல்லல், பொருட்களை வழங்குதல் மற்றும் முகாமை செய்தல்.

14. அமைச்சின் செலவுகளைக் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளாகத் தயாரித்துத் திட்டமிடற் பிரிவுக்கு வழங்குதல் இடம்பெற்றுவருவதுடன், அங்கவீனமுற்ற

நபர்களுக்கான கொடுப்பனவு மற்றும் பிரதேச செயலகங்களிற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான வேதனக் கொடுப்பனவு தொடர்பாக 25 மாவட்டங்களிலுள்ள 331 பிரதேச செயலகங்களுக்கும் நிதியேற்பாட்டினை விடுவிக்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

15. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும், அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம், சமூக அபிவிருத்தி முகாமைத்துவத் தகவல் மையம், சமூக அபிவிருத்தி, தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு சுய தொழில் செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல், தேசிய உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம், சமூகப் பராமரிப்பு நிலையம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் மற்றும் இலங்கை அரசிற்கிடையேயுள்ள உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிறுவனங்களுக்கான நிதி முகாமைத்துவத்திற்குரிய வழிகாட்டல்கள் மற்றும் கணக்குகளை ஆரம்பித்துச் செல்வதற்கு உதவி நல்குதலானது 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு 2013 ஆம் ஆண்டிற் சமூக சேவைகள் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நிதி முகாமைத்துவத்தினை வலுமிக்கதாக முன்னெடுத்துக் கணக்குகளை நாளதுவரைப்படுத்தும் செயற்பாடுகளினூடாக நாட்டின் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உச்சளவிலான பங்களிப்பொன்று கணக்குகள் கிளையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# 9. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

## அறிமுகம்

அரச கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு இசைவாக அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், நன்கொடையாளர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் போன்ற குறிப்பிட்ட பங்குதார்களுடன் ஆலோசனையிலீடுபட்டு அபிவிருத்தித் திட்டங்களையும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரிப்பது திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவின் இலக்காக உள்ளது. சமூகப் பிரிவினுடனான தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

## செயற்பாடுகள்.

கீழே குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகள், இவ்வமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- தொடர்புடைய பங்காளிகளுடன் ஆலோசனையிலீடுபட்டு அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்புபட்ட கொள்கைகளை வடிவமைத்தல்.

  இலங்கைக்கான குடும்பக் கொள்கை 2012 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு வருவதுடன் இற்றை வரையில் அது வரைவாக தயாரிக்கப்பட்டு மக்களின் கருத்துக்களுக்கா முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை 2014 ஆம் ஆண்டிற் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- அரச முன்னுரிமைகள் மற்றும் நடுப்பகுதிப் பாதீட்டு ஏற்பாடுகளை ஒத்ததாக அமைச்சுக்கான வருடாந்த செயற் திட்டத்தினைத் தயாரித்தல்.

  2013 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டம், 2012 ஆம் ஆண்டிற் தயாரிக்கப்பட்டது
- அமைச்சின் வருடாந்தச் செயற் திட்டத்திற்கு எதிராகக் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.

  2013 ஆம் ஆண்டில் மூன்று காலாண்டு அறிக்கைகள். தயாரிக்கப்பட்டன.
- பாதீட்டுக் குழுநிலை வாதம் தொடர்பாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சின் செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்தல்.

  மூன்றாவது காலாண்டு முன்னேற்றத்துடன் 2013 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்தல்.

  2012 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையானது 2013 ஆம் ஆண்டிற் தயாரிக்கப்பட்டுள்ளது.
- சார்க் சமூகப் பட்டயத்துடன் தொடர்புபட்ட செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும்.
- கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்தலின் கீழ் சமூக சேவைகள் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை ஜனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிடுதல்.
- சமூகத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு அதிகாரிகளினால் வேண்டப்படுகின்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.

- அரச முன்னுரிமைகளுக்கு அமைவாகச் சமுதாயத்தின் பாதிக்கப்பட்ட குழுக்களின் சமூக நலன்புரியை மேம்படுத்துவதற்கான புதிய கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.
- உலக வங்கி, UNICEF, UNPFA,WFP,WHO,UNV மற்றும் UNDP ஆல் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களிலும் மற்றும் கருத்தரங்குகளிலும் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களைப் பின்பற்றுதல்.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மேலாக 2013 ஆம் ஆண்டிற் திட்டமிடற் பிரிவினூடாக நிறைவேற்றப்பட்டுள்ள செயற்பாடுகள் பின்வருமாறு.

**பிரதான செயற்பாடுகள்**

## "சமூக சேவைகள் செய்தி" - காலாண்டுச் செய்திக் கதிர்

"சமூக சேவைகள் செய்தி" என்ற தலைப்பில் ஒரு காலாண்டுச் செய்திக் கதிர் இப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சின் பல்வேறு பிரிவிகளினூடாக இடம்பெற்று வருகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே போற் செயற்திட்டத்திற்கு அமைய செயற்பாட்டு முன்னேற்றமும், விசேட சந்தர்ப்பத்திற் சமூக சேவைகளுக்கான கட்டுரைகளும் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள், மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வருடத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சியினை ஒட்டிச் "சமூக சேவைகள் செய்தி - தேசத்திற்கு மகுடம் விசேட வெளியீடு" 2013 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

## இலங்கைக்கான குடும்பக் கொள்கையினை மீள வடிவமைத்தல்.

இந்நாட்டின் பாதகத்திற்குள்ளான குழுவினரின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கான கொள்கை வழிகாட்டலை வழங்கும் பொருட்டுக் குடும்பக் கொள்கை எனத் தலைப்பிடப்பட்ட ஒரு கொள்கை ஆவணம் 2012 ஆம் ஆண்டிற் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிமேதகு ஜனாதிபதியின் அவதனானிப்பின் பிரகாரம் பேராசிரியர் கே. கருணாதிலக அவர்களினைத் தலைவராகக் கொண்ட குழு இவ் ஆவணத்தினை மிகவும் விரிவாகத் தயாரிப்பதற்குத் திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் அதற்கான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் இப்பிரிவினூடாக இடம்பெற்று வருகின்றன.

## "திரிசவிய" கருத்திட்டத்தினை அமுயற்படுத்துதல்.

உலக வங்கியின் உதவியின் கீழ் 2013 ஆம் ஆண்டிலிருந்து அமுற்படுத்தப்பட்டு வருகின்ற அங்கவீனமுற்ற நபர்களுக்கான நிதி உதவியினை வழங்குதல் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதலான "திரிசவிய" கருத்திட்டம் அமுற்படுத்தப்பட்டு வருகின்றது. திட்டமிடற் பிரிவு இக்கருத்திட்டத்தினைக் கண்காணிக்கின்றது.

## தன்னார்வத் தொண்டர் செயலகத்தினை அமைத்தல்.

அமைச்சுடன் தன்னார்வத் தொண்டர் செயலகம் 2013 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. யுன்டிபி, யுஎன்வி, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையுடன் தன்னார்வச் செயலகத்தினை அமைப்பதற்கான அனைத்து ஆரம்பப் பணிகளும் திட்டமிடற் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 10. உள்ளகக் கணக்காய்வுக் கிளை

## அறிமுகம்

சமூக சேவைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் கிளை பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கீழ் அமுற்படுத்தப்பட்டு வருவதுடன் நி.பி. 134(1) இன் பிரகாரம் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நேரடியாக அமைச்சின் செயலாளருக்குப் பொறுப்புக் கூறுவார். இவ் அலகு இரண்டு உள்ளகக் கணக்காய்வாளர்களை (அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) உள்ளடக்கியுள்ளது.

## நோக்குகள்

2013 ஆம் ஆண்டிற் சமூக சேவைகள் அமைச்சின் சமூக அபிவிருத்தித் தொலைநோக்கு மற்றும் பணி தொடர்பான நிதிப்பிரமாணம் 133 கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

## கணக்காய்வின் விடயப் பரப்பு

1. சமூக சேவைகள் அமைச்சு
2. சமூக சேவைகள் திணைக்களம்
3. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்
4. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை
5. முதியோர்களுக்கான தேசிய சபை
6. விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியம்

## செயற்பாடுகள்.

1. 2013 வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.
2. இலக்கிடப்பட்ட தினங்களில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைச் செயலாளருக்குச் சமர்ப்பித்தல்.

முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு கூட்டங்களில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாக மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியிற் கலந்துரையாடுதல். கூட்டங்கள் பின்வரும் தினங்களில் நடாத்தப்பட்டுள்ளன.

| மாதாந்தம் | காலாண்டு |
|---|---|
| 2013/03/25 | 2013/03/27 |
| 2013/06/12 | 2013/06/14 |
| 2013/08/22 | 2013/08/23 |
| 2013/11/12 | 2013/11/14 |

## விசேட செயற்பாடுகள்

### 03. ஆய்வுகள்

- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்படுகின்ற வீடமைப்பு உதவி மற்றும் சுய தொழில் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான ஆய்வு.
- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் 70 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்படுகின்ற ரூபா. 1000/- கொடுப்பனவு.

- "திரி சவிய" கருத்திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு பணத்தினை மாற்றுதல் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கருத்திட்டம்.
  (ரூபா. 3000/- கொடுப்பனவு, 9 மாவட்டங்களுக்கான 90 பிரதேச செயலகங்கள்)

04. சமூக சேவைகட் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களை அவதானித்தல்.
(தௌம்புயாய, கட்டவல, வத்தேகம, சீதுவ, ஜயவிரு புகலிடம் மற்றும் ஜயவிரு சமாதி நிவகன – புவக்பிட்டிய)

05. விசேட அந்தரங்க ஆய்வு

அமைச்சின் செயலாளருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசேட அந்தரங்க ஆய்வுகளை முன்னெடுத்து அறிக்கையிடுதல்.
* செவனகல பிரதேச செயலகம் தொடர்பான ஆய்வு இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

# Pictorial Review



ආබාධිත දින සැමරුම් උත්සවයේ ආබාධිත දරුවන්ගේ නර්තන අවස්ථාවක්

அங்கவீனமுற்ற நபர்களுக்குகான சர்வதேச தினத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வொன்று - 2013

Dancing event of disabled children in the commemoration ceremony of the international disable day – 2013



ආබාධිත පුද්ගලයන් සඳහා දකුණු ආසියාවේ වඩාත් හිතකාමී නගරය ලෙස වැල්ලවාය නගරය ලෝක සෞඛ්‍ය සංවිධානය විසින් නම් කොට එයට අදාල සහතික පත්‍රය ගරු කථානායක චමල් රාජපක්ෂ මහතා වෙත පිලිගැන්වූ අවස්ථාව

அங்கவீனமுற்ற நபர்களுக்கான மிகவும் சிநேகபூர்வமான நகரமாக வெல்லவாய நகரம் உலக சுகாதார அமைப்பினால் பெயரிடப்பட்டு அதற்கான சான்றிதழ், சபாநாயகரான கௌரவ சமல் ராஜபக்ச அவர்களுக்கு வழங்கிய வேளையில்

Hon. Chamal Rajapaksa, the speaker being presented with the certificate with regard to designating wellawaya the most disabled – friendly town in the Asia by the world health organization



ගරු අමාත්‍යතුමා විසින් කණ්නාඩි යුවලක් ලබාදීම - දැයට කිරුළ 2013

கௌரவ அமைச்சர் அவர்களினால் மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல் - தேசத்திற்கு மகுடம் 2013

Donating a pair of spectacles by Hon. Minister – Deyata Kirula 2013



සිසුණැන පුබුදුව වැඩසටහන මගින් කියවීමේ මධ්‍යස්ථානයක් විවෘත කිරීම

சிசுநன புபுதுவ நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வாசிகசாலையொன்றினைத் திறந்து வைத்தல்.

Opening ceremony of a reading center under the “Sisunena Pubuduwa” programme



ආබාධිත දින සැමරුම් පෙළපාළිය 2013

அங்கவீனமுற்ற நபர்களுக்கான சர்வதேச தினக் கொண்டாட்ட நடை பவனி 2013.

The array to mark international disabled day – 2013



ආබාධිත දරුවෙකු සඳහා ගරු අමාත්‍යතුමා විසින් රෝද පුටුවක් පරිත්‍යාග කිරීම

அங்கவீனமுற்ற சிறார் ஒருவருக்கு கௌரவ அமைச்சர் அவர்களினால் சக்கர நாற்காலி வழங்கியபோது

Donating a wheel chair to a disabled child by Hon. Minister



ගරු නියෝජ්‍ය අමාත්‍යතුමා විසින් රෝද පුටුවක් ලබාදීම

கௌரவ பிரதி அமைச்சர் அவர்களினால் சக்கர நாற்காலி வழங்குதல்

Donating a wheel chair by Hon. Deputy Minister



සී.බී.ආර්. ව්‍යාපෘතිය මගින් නිවෙස් මට්ටමේ පුනරුත්ථාපනය සිදු කිරීම.

சீ.பீ.ஆர் கருத்திட்டத்தினூடாக வீட்டு மட்டத்தில் புனர்வாழ்வு இடம்பெறுதல்.

Home based rehabilitation implemented by CBR




සී.බී.ආර්. වැඩසටහන මගින් ආබාධිත පුද්ගලයන් සඳහා ස්වයං රැකියා පුහුණුව ලබා දෙමින්

**சீ.பீ.ஆர். நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சுய தொழிற் பயிற்சியினை வழங்கிய வேளையில்**

Training on self employment for PWDs conducted by CBR programme



සී.බී.ආර්. ව්‍යාපෘතිය මගින් පවත්වනු ලැබූ නායකත්ව වැඩමුළුවක අවස්ථාවක්

**சீ.பீ.ஆர். நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பட்டறை**

Leadership workshop conducted by CBR programme



උපදේශන අංශය මගින් පවත්වනු ලැබූ උපදේශන වැඩසටහනක අවස්ථාවක්

**உளவளத்துணைப் பிரிவினூடாக நடாத்தப்பட்ட உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம்**

.

Counseling programme conducting by counseling Division



උපදේශන අංශය මගින් ක්‍රියාත්මක කරනු ලැබූ යෝග වැඩසටහනක්

**உளவளத்துணைப் பிரிவினால் நடாத்தப்பட்ட யோகாசன வேலைத்திட்டம்.**

Yoga exercises programme conducted by counseling division



නිවාසාධාර ලබාදුන් ආබාධිත පුද්ගලයෙකුගේ නිවසකට මුල්ගල තබන අවස්ථාව

வீடமைப்பு உதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட வேளையில்

Laying the first stone of the house of a disabled



තනි මාපිය පවුල් සංවර්ධන ව්‍යාපෘතිය මගින් ස්වයං රැකියා සඳහා අධාර ලබාදුන් කාන්තාවක්

தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சுய தொழில் உதவி பெண் ஒருவருக்கு வழங்கப்படுதல்.

Women received the assistance for self employment under the Single Parent Development programme



සමාජ සත්කාරක ව්‍යාපෘතිය මගින් ස්වයං රැකියා සඳහා අධාර ලබාදුන් කාන්තාවක්

சமூகப் பராமரிப்புக் கருத்திட்டத்தினூடாக சுயதொழிலுக்கான உதவியினை பெண் ஒருவர் பெற்றுக் கொள்ளுதல்.

Women received the assistance for self employment under the Social Care project



සමාජ සත්කාරක සංකල්පය හඳුන්වා දෙමින්

சமூகப் பராமரிப்பு எண்ணக்கருவினை அறிமுகஞ் செய்தல்.

Introducing the concept of Social Care